**தமிழ்நாடு அரசின் துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தை, 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 8 ஆம் நாள் சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றும் உரை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

**பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்**
**அருமை உடைய செயல்**

**(குறள் 975)**

பெருமை உடையவர்கள் மட்டுமே அளப்பரிய செயல்களை முறைப்படி செய்து முடிக்க முடியும் என்ற திருவள்ளுவரின் வாக்கினை மெய்யாக்கி; **'மக்களால் நான் – மக்களுக்காகவே நான்'** என்று தமிழக மக்களின் நலனுக்காகவும், தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து; 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்று தன்னலம் கருதாமல் அல்லும் பகலும் அயராது உழைத்து; தமிழக மக்களின் நெஞ்சங்களில் மறைந்தும் மறையாமல் என்றும் வாழ்பவர்; எங்கள் உள்ளங்களில் உணர்வின் ஊற்றாகவும் ஆற்றலின் தூண்டுகோலாகவும் எங்களை வழிநடத்தும் பேரொளியாகவும்; அவர் உழைப்பால் அமைத்துத் தந்த இந்த நல்லாட்சியின் காவல் தெய்வமாகவும்; விளங்கிவரும் **மறைந்த முன்னாள் முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா** அவர்கள், காட்டிய நல்வழியில், எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடித்து, வெற்றிகரமாக அம்மா அவர்களின் ஆட்சியை **மாண்புமிகு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் சிறப்பாக தொடர்ந்து நடத்தி வருகிறார். எங்களின் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அளப்பரிய பேராற்றலை எண்ணி வியந்து, எங்களை தொடர்ந்து வழிநடத்த வேண்டும்

என வணங்கி, அவர்கள் விட்டுச் சென்ற நற்பணிகளைத் தொடர, **2019–2020** ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை இந்தப் பேரவையின் முன் சமர்ப்பிக்க விழைகிறேன்.

2. ‘**அமைதி, வளம், வளர்ச்சி**’ என்ற மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்களின் வளர்ச்சி முழக்கத்தை அடிப்படைக் கொள்கையாகக் கொண்டு இந்த அரசு செயல்பட்டு வருகிறது. ஒரு நாடு வளமும், வளர்ச்சியும் அடைய வேண்டுமெனில் அங்கு சட்டத்தின் ஆட்சி நிலைபெற்று அமைதி நிலைநாட்டப்பட வேண்டும். இந்த அரசு அமைதியை நிலைநாட்டி மக்களின் பாதுகாப்பை உறுதி செய்து சமூகப் பொருளாதார வளர்ச்சியை பெருக்கி வருகிறது. பொருளாதார வளர்ச்சி மட்டும் பலதரப்பட்ட மக்கள் வளம் பெறுவதை உறுதி செய்யாது என்பதால்தான் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி, பொருளாதார வளர்ச்சியின் பயனை ஏழை எளிய மக்களும் நுகர இந்த அரசு வழிவகை செய்துவருகிறது. இதன் மூலம், மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்களின் ‘**எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்**’ என்ற இலட்சியக் கனவை நிறைவேற்ற இந்த அரசு அரும்பாடுபட்டு வருகிறது.

3. பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கி, கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, வறுமையை ஒழிப்பதற்கான கடினமான சவாலை இந்த அரசு எதிர்கொண்டுள்ளது. அதனால்தான் முதன்மைத் துறையை ஊக்குவித்து, அதை வலுப்படுத்தும் அதே வேளையில், உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் கூடுதல் முதலீடுகளை ஈர்ப்பதற்கும் இந்த அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. திறன் மேம்பாடு, வறுமை ஒழிப்பு, நகர்ப்புர உட்கட்டமைப்பின் மேம்பாடு, சாலை, மின்சாரம், நீர்ப்பாசனம்

போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவது போன்ற பல்வேறு சவால்களையும் இந்த அரசு தொடர்ந்து திறம்பட கையாண்டு வருகிறது. அனைவரும் பயன்பெறத்தக்க வகையில், சுகாதாரம், கல்வி ஆகியவற்றில் உயர்தரமான சேவையைப் பெற்றிட உட்கட்டமைப்பு வசதிகளைத் தரம் உயர்த்துவதற்கு இந்த அரசு தொடர்ந்து முன்னுரிமை வழங்கி வருகிறது. நிதிநிலை மேலாண்மை வழுவாமல் இந்த சவால்களுக்குத் தீர்வு கண்டு, மக்களின் நலனை மேம்படுத்தும் வகையில் இந்த வரவு–செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

4. மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 51.86 சதவீதம் சேவைத் துறையின் பங்களிப்பு இருப்பதால் மாநிலப் பொருளாதாரம் சேவைத் துறையையே அதிகம் சார்ந்துள்ளது. சமச்சீரான வளர்ச்சி அடைந்து அதன் பலன் அனைவரையும் சமமாகச் சென்றடையும் வகையில் தொழில் துறை உள்ளிட்ட இரண்டாம் நிலை துறைக்கும், வேளாண் துறைக்கும் இந்த அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகிறது. 2011–2012 ஆம் ஆண்டில் மாநிலத்தில் 1,03,600 ரூபாயாக இருந்த தனி நபர் வருமானம் 2017–2018 ஆம் ஆண்டில், நிலையான விலைகளின் அடிப்படையில், 1,42,267 ரூபாயாக உயர்ந்துள்ளது. 2017–2018 ஆம் ஆண்டில், முன் மதிப்பீடுகளின்படி, நிலையான விலைகளின் அடிப்படையில், தேசியப் பொருளாதார வளர்ச்சி 7.20 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ள நிலையில், அதே ஆண்டில் மாநிலப் பொருளாதார வளர்ச்சியானது 8.09 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. 2018–2019 ஆம் ஆண்டில் முதல்நிலை மதிப்பீடுகளின்படி, மாநிலப் பொருளாதார வளர்ச்சி 8.16 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், உயர் வளர்ச்சிப் பாதையில் மாநிலம் செல்ல வழிவகை ஏற்பட்டுள்ளது.

5. வறுமை, கல்வியறிவின்மை, வேலையின்மை, சுகாதாரக் குறியீடுகள் மற்றும் பாலின சமத்துவம் போன்ற குறியீடுகளில் 100 பிற்படுத்தப்பட்ட வட்டாரங்களில் சிறப்புக் கவனம் செலுத்தி மாநிலத்தில் சமச்சீரான வளர்ச்சியை அடைவதற்காக, மாநில சமச்சீர் வளர்ச்சி நிதிய (State Balanced Growth Fund) திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வரவு–செலவுத் திட்டத்தில், இந்நிதியத்திற்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று, 'சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு', 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 75 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுதவிர, தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்திற்கு (TANII) 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. பதினான்காவது நிதிக்குழுவின் பரிந்துரைகளால், மாநிலங்களுக்கு இடையேயான மத்திய அரசின் நிதிப் பகிர்வில் தமிழ்நாட்டிற்கான பங்கு குறைந்துள்ளபோதும், 'உதய்' திட்டத்தையும், ஊதிய உயர்வையும் இந்த அரசு செயல்படுத்தியுள்ளது. 2017–2018 ஆம் ஆண்டில் 9.07 சதவீதமாக இருந்த மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் வளர்ச்சி, 2018–2019 ஆம் ஆண்டில் 14 சதவீதத்திற்கும் கூடுதலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. **வரிவருவாயில் ஏற்பட்டுள்ள இந்த சாதகமான மாற்றத்தினால் 2018–2019 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் கணிக்கப்பட்ட வருவாய்ப் பற்றாக்குறை 19,319 கோடி ரூபாயிலிருந்து 2019–2020 ஆம் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறை 14,315 கோடி ரூபாயாகக் குறையும் என கணிக்கப்பட்டுள்ளது.** 'உதய்' திட்டம் மற்றும் ஊதிய உயர்வு போன்றவை ஏற்படுத்திய தாக்கம் வரும் காலத்தில் குறையும் என்பதாலும், சொந்த வரி வருவாயில் காணப்படும் உயர் வளர்ச்சியாலும், வரும் ஆண்டுகளில்

வருவாய்ப் பற்றாக்குறை படிப்படியாகக் குறைய வாய்ப்புள்ளது. பொருட்கள் மற்றும் சேவைகள் வரி முறையை சிறப்பாகச் செயல்படுத்தும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடும் உள்ள நிலையில், பொருட்கள் மற்றும் சேவைகள் வரி முறையின் கீழ் கிடைக்கப்பெறும் வரி வருவாய்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையும் பெற்றுள்ளது. எனினும், மாநிலங்களுக்கு இடையேயான ஒருங்கிணைந்த பொருட்கள் மற்றும் சேவைகள் வரி வருவாயில் 2017–2018 ஆம் ஆண்டில் மாநிலத்திற்கு கிடைக்க வேண்டிய 5,454 கோடி ரூபாய் அளவிலான பங்கையும், பொருட்கள் மற்றும் சேவைகள் வரியில் 455.16 கோடி ரூபாய் அளவிலான உறுதிசெய்யப்பட்ட இழப்பீட்டுத் தொகையும் மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்கு இதுவரை கிடைக்கப் பெறவில்லை. இந்த நிலுவைத் தொகைகளை விடுவிப்பதில் மத்திய அரசு செய்யும் தாமதம் மாநிலத்தின் நிதிநிலையின் மீது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

7. ஒவ்வொரு ஆண்டும் மாநிலத்தின் வருவாய்ச் செலவினங்கள் உயர்ந்து வருவதால், மூலதனச் செலவினங்களையும், உட்கட்டமைப்புத் திட்டங்களையும் அதிக அளவில் மேற்கொள்வதற்கு போதுமான நிதி ஆதாரங்கள் இல்லை. எனவே, உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கான கருத்துருவாக்கம் முதல் செயலாக்கம் வரை விரைந்து செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் ஏற்படுத்தப்பட்டதுடன், இதற்கான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்காக தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகமும் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் 3,329 கி.மீ. நீளமுள்ள நெடுஞ்சாலைப் பணிகள், சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டம் ஆகியவற்றிற்கான விரிவான திட்ட அறிக்கைகளை தயாரிப்பதற்காக முறையே 132.76 கோடி ரூபாயும், 21.83 கோடி ரூபாயும் அனுமதித்துள்ளதுடன், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின்

இரண்டாம் கட்டப் பணிகள் மற்றும் அதிவேக மக்கள் திரள் போக்குவரத்தையும் (MRTS) சென்னை மெட்ரோ இரயிலையும் ஒருங்கிணைத்தல் போன்ற திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகளை தயாரிப்பதற்காகவும் நிதி உதவியை அளித்துள்ளது. சென்னை திறன்மிகு நகர நிறுவனம் மூலம் 660 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட உள்ள அறிவுசார் போக்குவரத்து அமைப்புத் திட்டத்தினை (Intelligent Transport System Project) தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் உருவாக்கி, இத்திட்டத்திற்கு ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதியுதவியையும் பெற்றுள்ளது.

8. தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம், இதுவரை 1,925 கோடி ரூபாய் நிதியைத் திரட்டியுள்ளதுடன், நீர் மின்திட்டங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல், வர்த்தக மையங்கள், சாலைகள் அமைத்தல், பேருந்துப் பணிமனைகளை நவீனமயமாக்கல், வாங்கும் திறனில் வீட்டுவசதி, பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைத்தல் ஆகிய திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க உள்ளது. தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகத்தின் மூலம் வரும் ஆண்டுகளில், 2,500 கோடி ரூபாய் நிதியைத் திரட்டுவதற்கான உறுதி பெறப்பட்டுள்ளது. **இரண்டு இலட்சம் நான்கு சக்கர வாகனங்கள், இரண்டு இலட்சம் இரு சக்கர வாகனங்களை நிறுத்தக்கூடிய அளவில், நிலத்தடி வாகன நிறுத்த வசதிகள், பன்னடுக்கு வாகன நிறுத்த வசதிகள் மற்றும் சாலையோர திறன்மிகு வாகன நிறுத்தம் ஆகியவற்றை செயல்படுத்த 'விரிவான ஒருங்கிணைக்கப்பட்ட வாகன நிறுத்த மேலாண்மைத் திட்டத்தை', அரசு–தனியார் பங்களிப்பு முறையின் கீழ், 2,000 கோடி ரூபாய் செலவில் சென்னை நகரில் இந்த அரசு செயல்படுத்தும். தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம் இத்திட்டத்திற்குத் தேவையான நிதியுதவியை அளிக்கும்.**

**பேரிடர் மேலாண்மை**

**9.** மக்களுக்கு உரிய முன் எச்சரிக்கைகளை வழங்கி, கஜா புயலுக்குப் பின்னரான நிவாரணம் மற்றும் மறுசீரமைப்புப் பணிகளை இந்த அரசு திறம்பட கையாண்டுள்ளது. **2018–2019** ஆம் ஆண்டிற்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதியத்திற்கு **786** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. கஜா புயல் ஏற்படுத்திச் சென்ற பாதிப்பைத் தணிப்பதற்கான தற்காலிக மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக, தேசியப் பேரிடர் நிவாரண நிதியத்திலிருந்து மத்திய அரசு **900.31** கோடி ரூபாயை விடுவித்தது. இந்த நிதி ஆதாரங்களுடன் மாநிலத்தின் சொந்த நிதியையும் ஒருங்கிணைத்து, பயிர் சேதங்களுக்காக **774.13** கோடி ரூபாயும், உதவி நிவாரணத்திற்காக **577.46** கோடி ரூபாயும், வீடுகள் மற்றும் குடிசைகள் சேதமடைந்த குடும்பங்களுக்கு நிவாரணமாக **401.50** கோடி ரூபாயும், மீனவர்களின் சேதமடைந்த படகுகளுக்காக **41.63** கோடி ரூபாய் உட்பட, ஆக மொத்தம் உடனடி நிவாரணப் பணிகளுக்காக **2,361.41** கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. குடிசைகள், தென்னை மரங்கள் மற்றும் மீனவர்களின் எப்.ஆர்.பி. படகுகளுக்கு ஏற்பட்ட சேதத்திற்கான இழப்பீட்டுத் தொகையை, மாநிலப் பேரிடர் நிவாரண நிதியத்தின் வரையறையைவிடக் கூடுதலாக இந்த அரசு கணிசமாக உயர்த்தி வழங்கியுள்ளது. மேலும், தற்போது நிலவிவரும் வறட்சியைக் கருத்தில் கொண்டு குடிநீர் பற்றாக்குறை ஏற்படாமல் தடையின்றி குடிநீர் வழங்க இதுவரை **157** கோடி ரூபாய் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. **2019–2020** ஆம் ஆண்டிற்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதியத்திற்காக **825** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10.** சேதமடைந்த குடிசைகளுக்கு மாற்றாக கான்கிரீட் வீடுகள் கட்டுதல், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும்

வகையில் தென்னை மற்றும் இதர மரத்தோட்டப் பயிர்களை மீண்டும் பயிர் செய்தல் போன்ற நிரந்தர நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக தனியே ஒரு திட்ட அலுவலகம் உருவாக்கப்பட்டுள்ளது. தென்னை மற்றும் இதர மரத்தோட்டப் பயிர்களை மீண்டும் பயிரிடுவதற்காக, இதுவரை 230.09 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்தபடி, கஜா புயல் பாதித்த மாவட்டங்களில் சேதமடைந்த குடிசைகளுக்கு மாற்றாக ஒரு வீட்டுக்கு 1.70 இலட்சம் ரூபாய் அலகுத் தொகை வீதம், 1,700 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், ஒரு இலட்சம் வீடுகள் கட்டுவதற்கான பணிகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. இத்திட்டச் செலவில், 720 கோடி ரூபாயை மத்திய அரசு தனது பங்காக ஏற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கிறேன். மீதமுள்ள 980 கோடி ரூபாயை மாநில அரசின் பங்குத் தொகையாக தமிழ்நாடு ஊரக வீட்டுவசதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் மூலம் கடன் பெற்று இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

11. அடிக்கடி வெள்ள பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளில், எதிர்காலத்தில் அத்தகைய பாதிப்புகள் ஏற்படாமல் தடுப்பதற்கான, நீண்டகாலத் திட்டப் பணிகளை மேற்கொள்வது அவசியமாகும். **ஒரு சிறப்பு முயற்சியாக, நீர் ஆதாரங்களைப் பெருக்குவதற்காகவும், வெள்ளத் தடுப்பிற்காகவும், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் உள்ள ஒரத்தூர் கிராமத்திற்கு அருகே அடையாறு ஆற்றின் உப நதியான ஒரத்தூர் நதியின் குறுக்கே உப வடிநிலங்களுக்கு இடையே நீர் பரிமாறும் கால்வாயுடன் கூடிய நீர்த்தேக்கம் அமைத்தல்; குறிஞ்சிப்பாடி வட்டத்தில் பரவனாற்றின் ஆற்றுப் படுகையை மறுசீரமைத்தல் (Regrading) மற்றும் அருவாள்முக்கு நீட்சியிலிருந்து வெள்ள நீரினைத் திருப்புவதற்கான**

**புதிய கால்வாயை அமைத்தல்; சிதம்பரம் வட்டத்திலுள்ள பேரம்பட்டிற்கு அருகில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே புதிய வெள்ளத் தடுப்பு நீரொழுங்கியை அமைத்தல்; சிதம்பரம் வட்டத்தில் கடல்நீர் உட்புகுவதைத் தடுப்பதற்காக, பிச்சாவரம் கிராமத்தின் அருகில் உப்பனாறு ஆற்றின் குறுக்கே கடைமடை நீரொழுங்கியை அமைத்தல் மற்றும் 10 இதர பணிகள் உட்பட நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகளை 284.70 கோடி ரூபாய் மொத்தச் செலவில் இந்த அரசு வரும் நிதியாண்டில் மேற்கொள்ளும்.**

வருவாய் நிர்வாகம்

12. மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு அருகிலேயே அரசு சேவைகளை வழங்க இந்த அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 2011 ஆம் ஆண்டு முதல், 79 புதிய வருவாய் வட்டங்களும், 10 புதிய வருவாய்க் கோட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. 2018–2019 ஆம் ஆண்டில் மட்டும், எட்டு வருவாய் வட்டங்களை இந்த அரசு உருவாக்கியுள்ளது. விழுப்புரம் மாவட்டத்திலிருந்து பிரித்து, கள்ளக்குறிச்சியை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். **மதுரை மாவட்டத்தில் உள்ள திருமங்கலத்தை தலைமையிடமாகக் கொண்டு, திருமங்கலம், கள்ளிக்குடி மற்றும் திருப்பரங்குன்றம் ஆகிய மூன்று வட்டங்களை உள்ளடக்கிய புதிய வருவாய்க் கோட்டம் ஒன்று 2019–2020 ஆம் ஆண்டில் உருவாக்கப்படும் என்பதை இப்பேரவைக்கு அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.**

13. முதியோர், மாற்றுத் திறனாளிகள், விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், திருநங்கைகள் போன்ற நலிவடைந்த பிரிவினருக்கு இந்த அரசு மாதம் 1,000 ரூபாய் ஓய்வூதியமாக வழங்கி

வருகிறது. இன்றைய நிலவரப்படி 29.47 இலட்சம் பயனாளிகள் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்தைப் பெற்று வருகின்றனர். தகுதியுடைய சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியதாரர்களுக்கு, தீபாவளிப் பண்டிகையின் போதும், பொங்கல் பண்டிகையை முன்னிட்டும், விலையில்லா சேலைகளும், வேட்டிகளும் வழங்கப்பட்டுள்ளன. **2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சமூகப் பாதுகாப்பு உதவித் தொகை வழங்கும் திட்டங்களுக்காக 3,958 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

14. 2018–2019 ஆம் ஆண்டில், இதுவரை 1.93 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்களை தகுதி வாய்ந்த ஏழைக் குடும்பங்களுக்கு இந்த அரசு வழங்கியுள்ளது. ஆட்சேபகரமற்ற புறம்போக்கு நிலங்களில் ஐந்தாண்டுகளுக்கும் மேலாக ஆக்கிரமித்து வசித்து வருபவர்களின் வீட்டு மனைகளை வரன்முறை செய்து வீட்டுமனைப் பட்டா வழங்க இந்த அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 1.5 இலட்சம் குடும்பங்கள் பயன்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. கணினிமயமாக்கல் மூலம் வருவாய் நிர்வாகத்தை மேம்படுத்தும் முயற்சிகளை இந்த அரசு தொடர்ந்து மேற்கொள்ளும். கணினிவழி பட்டா மாறுதல் திட்டம் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மக்களுக்கு பொதுச் சேவைகள் வழங்குவதை மேம்படுத்துவதற்காக, இ–மாவட்டத் திட்டம், நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம் மற்றும் இ–அடங்கல் திட்டம் ஆகியவை மேலும் வலுப்படுத்தப்படும். மேம்பட்ட தொழில்நுட்ப வசதிகளால், மனுதாரர் சிட்டா நகலையும், அ–பதிவேடு நகலையும், இணையதளம் வாயிலாக எந்த நேரத்திலும், எந்த இடத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு எடுக்கப்படும் நகல்களில், இணையவழி கையொப்பமுடன் சிறப்புக் குறியீடு இணைக்கப்பட்டு, இந்த ஆவணங்கள் சட்டப்பூர்வமான ஆவணங்களாக அனுமதிக்கப்படுகின்றன.

15. 'உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்' கீழ் உள்ள பயனாளிகளுக்கு இந்த அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. 2018–2019 ஆம் ஆண்டில் இதுவரை 3.14 இலட்சம் பயனாளிகளுக்கு 251.89 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. விபத்து நிவாரணத் திட்டமும், நலிந்தோர் நிவாரணத் திட்டமும், ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனினும், இத்திட்டங்களின் கீழ், பொருள் ஈட்டுபவர் இறப்பின்போது 20,000 ரூபாய் மட்டுமே இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டு வருவதால், அது உயர்த்தப்பட வேண்டிய அவசியம் உள்ளது. எனவே, **வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் அனைத்துக் குடும்பங்களுக்கும் பயனளிக்கும் வகையில், விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் ஒன்றை இந்த அரசு விரைவில் அறிமுகப்படுத்தும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம், இயற்கை மரணம் மற்றும் விபத்தால் ஏற்படும் மரணத்தின்போது வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை, முறையே இரண்டு இலட்சம் ரூபாய் மற்றும் நான்கு இலட்சம் ரூபாயாகவும், விபத்தால் ஏற்படும் நிரந்தர ஊனத்திற்காக வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை ஒரு இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தப்படும். இத்திட்டத்திற்கான காப்பீட்டுக் கட்டணத் தொகைக்கு 250 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், உழவர் பாதுகாப்புத் திட்டத்திற்காக 169.81 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வருவாய்த் துறைக்கு மொத்தமாக 6,106.95 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்மொழி வளர்ச்சி**

16. தமிழ் இலக்கியத்தையும், தமிழர் பண்பாட்டையும் பாதுகாப்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. 2018–2019 ஆம் ஆண்டில்

தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு 5.97 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. யுனெஸ்கோ தயாரித்துள்ள, செல்வாக்குள்ள உலக மொழிகளின் பட்டியலில், தமிழ்மொழியை தற்போதுள்ள 14வது நிலையிலிருந்து 10வது நிலைக்கு உயர்த்த, சொற்குவை, தமிழ் வளர்ச்சி மையம், தமிழ்ப் பண்பாட்டு மையம் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ் அறிஞர்களுக்கு ஓய்வூதியத்தை தொடர்ந்து வழங்கி வருவது மட்டும் அல்லாமல், புகழ்பெற்ற தமிழ் அறிஞர்களின் படைப்புகளை மொழிபெயர்ப்பதையும் இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை வெற்றிகரமாக நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, பிற சர்வதேச பல்கலைக்கழகங்களிலும் இதுபோன்ற தமிழ் இருக்கைகளை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தமிழ் வளர்ச்சித் துறைக்காக 54.76 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சட்டம் ஒழுங்கு**

17. மாநிலக் காவல் துறை திறம்பட செயல்படத் தேவையான பணியாளர்களையும், நவீன உபகரணங்களையும், உட்கட்டமைப்பு வசதிகளையும் இந்த அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. கட்டடங்கள், உபகரணங்கள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 2016–2017 ஆம் ஆண்டு முதல் 904.23 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. திறன்மிகு காவல் திட்டத்தின் ஒரு பகுதியாக, ஒருங்கிணைந்த மாநில கட்டுப்பாட்டு அறையை இந்த அரசு தோற்றுவித்துள்ளது. முக்கியமான பகுதிகளில் கண்காணிப்பு கேமராக்களை நிறுவியதன் மூலம் குற்றங்கள் நடைபெறுவது

கட்டுப்படுத்தப்படுவதும், குற்றவாளிகள் துரிதமாகப் பிடிக்கப்படுவதும் உறுதி செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், 2018–2019 ஆம் ஆண்டில் 6,428 பணியாளர்களைத் தேர்வு செய்துள்ளது. இவ்வாரியம், 2019–2020 ஆம் ஆண்டில் மேலும் 9,975 நபர்களை காலியான பணியிடங்களுக்குத் தேர்வு செய்ய உள்ளது.

**18.** 'காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்' கீழ் மின் ஆளுமை பணிகள் திறம்பட செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் 126.68 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வரும் 'குற்றம் மற்றும் குற்றவாளிகளைக் கண்காணிக்கும் கணினி இணைப்புத் திட்டத்தாலும்', பொதுச்சேவை மையங்கள் மற்றும் குறுஞ்செயலிகள் மூலம் மக்களுக்கான சேவைகளை வழங்குவதாலும் குற்றங்களைக் கண்டறியும் திறனும், மக்களுடன் காவல் துறையினரின் தொடர்பும் மேம்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 'காவல் துறை நவீனமயமாக்கல்' திட்டத்திற்காக 111.57 கோடி ரூபாய் உட்பட காவல் துறைக்கு 8,084.80 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்**

**19.** நவீன கருவிகளை தொடர்ந்து வழங்கி, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையை இந்த அரசு நவீனப்படுத்தி வருகிறது. 2018–2019 ஆம் ஆண்டில் மட்டும், 3.73 கோடி ரூபாய் செலவில் ஐந்து தீயணைப்பு நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு 403.76 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சிறைச்சாலைகள்**

20. சிறைச்சாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகின்றன. 2018–2019 ஆம் ஆண்டில் சிறைச்சாலைகளில் உள்ள வசதிகளை மேம்படுத்துவதற்காக 40.13 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சிறைச்சாலைகள் துறைக்காக 319.92 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நீதி நிர்வாகம்**

21. சென்னையில் சிறப்பு நீதிமன்றம் உட்பட 33 புதிய நீதிமன்றங்களை 2018–2019 ஆம் ஆண்டில் இந்த அரசு அமைத்துள்ளது. நீதிமன்றங்களுக்கு 15 புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கு 2018–2019 ஆம் ஆண்டில் இந்த அரசு 101.89 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், நீதி நிர்வாகத்திற்காக 1,265.64 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வேளாண்மை**

22. கிராமப்புறங்களில் உள்ள பெரும்பாலான குடும்பங்களுக்கு இன்றளவும் வேளாண்மையே வாழ்வாதாரமாக அமைந்துள்ளது. வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணாமல், சமச்சீரான வளர்ச்சி என்பது சாத்தியமில்லை. பயிர்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதிலிருந்து, பண்ணை உற்பத்தித்திறனையும், விவசாயிகளின் வருமானத்தையும் பெருக்குவது என வேளாண்மைத் துறை மேம்பாட்டிற்கான உத்தி தற்போது மாறியுள்ளது. நாட்டின் முக்கியமான கவலைக்குரிய பிரச்சினையாக

விவசாயிகளின் துயரம் உருவாகியுள்ளது. தமிழகத்திற்கும் இது பொருந்தும். இப்பிரச்சினைகளுக்கு நீண்டகாலத் திட்டங்கள் மூலமே நிரந்தரத் தீர்வு காண முடியும். பயிர் சாகுபடியில் 79.38 இலட்சம் நில உடமைகள் நமது மாநிலத்தில் உள்ளன. அவற்றில், 92.51 சதவீத நில உடமைகளில் சிறு, குறு விவசாயிகள் விவசாயம் செய்கின்றனர். சிறிய நில உடமைகள், பருவநிலை மாற்றத்தால் சாகுபடியில் ஏற்படும் பாதிப்பு, உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் உள்ள இடர்பாடுகள், விலை ஏற்றத்தாழ்வின் மூலம் ஏற்படும் பாதிப்புகள், அறுவடைக்குப் பிந்தைய காலத்தில் ஏற்படக்கூடிய இழப்பு போன்ற பல்வேறு சவால்களை விவசாயம் சந்தித்து வருகிறது. இந்தச் சவால்கள் ஒவ்வொன்றையும் திறம்பட எதிர்கொள்வதற்கான திட்டங்களை இந்த அரசு வகுத்து செயல்படுத்தி வருகிறது.

23. வெள்ளம் அல்லது வறட்சியால் விவசாயிகள் அடிக்கடி பயிர் இழப்பைச் சந்திக்க நேரிடுகிறது. பருவநிலை பாதிப்புகளிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்க 2016 ஆம் ஆண்டு முதல் ‘பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம்’ செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2018–2019 ஆம் ஆண்டில், இதுவரை 21.70 இலட்சம் விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இது, கடந்த மூன்று ஆண்டுகளில் உயரிய சாதனையாகும். **2019–2020 ஆம் ஆண்டில், பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், புதிய பயிர்களையும், பகுதிகளையும் சேர்க்க இந்த அரசு அறிவிக்கை செய்ய உள்ளது. குறிப்பிட்ட பகுதிக்குள் ஏற்படும் இடர்பாடுகளான** (Localised Calamities) **ஆலங்கட்டி மழை, நிலச்சரிவு, வெள்ளப்பெருக்கு போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புகளோடு இடிமின்னலுடன் கூடிய திடீர் மழை** (Cloud Burst) **மற்றும் இயற்கை தீயினால்** (Natural fire) **ஏற்படும் பாதிப்புகளும் இத்திட்டத்தில் சேர்க்கப்படும். 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட**

**மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்கான காப்பீட்டுக் கட்டணத்தில் மாநில அரசின் பங்குத் தொகைக்காக 621.59 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

24. தமிழ்நாடு, நீர் பற்றாக்குறை உள்ள மாநிலமாகும். நிகர பயிர் சாகுபடிப் பரப்பில் சுமார் 58 சதவீதப் பரப்பில் மட்டுமே பாசன வேளாண்மை நடைபெறுகிறது. எனவே, நீர் சேமிப்பை அதிகரித்து ஒவ்வொரு துளி நீருக்குமான உற்பத்தித் திறனை அதிகரிக்க, நுண்ணீர்ப் பாசனத் திட்டத்திற்கு இந்த அரசு தீவிரமான ஊக்கம் அளித்து வருகிறது. இதுவரை இல்லாத அளவிற்கு, 2018–2019 ஆம் ஆண்டில் 1.80 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் நுண்ணீர் பாசனத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. **2019–2020 ஆம் ஆண்டில் 1,361 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேலும் இரண்டு இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை அமைப்பதற்காக விவசாயிகளுக்கு அரசு 90 சதவீதம் மானியம் அளிக்கிறது. 2019–2020 ஆம் ஆண்டில், 84.09 கோடி ரூபாய் மானிய உதவியுடன், 10 குதிரை திறன் வரை உள்ள சூரிய சக்தியால் இயங்கும் 2,000 பம்பு செட்டுகளை விவசாயிகளுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.**

25. 2016–2017 ஆம் ஆண்டிலிருந்து 802.90 கோடி ரூபாய் திட்டச் செலவில் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையான மானாவாரி வேளாண்மைக்கான இயக்கத்தினால், இது வரை 6.0 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவு பயன்பெற்றுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டில் 292 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேலும் 400 தொகுப்புகள் உருவாக்கப்பட்டு இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். ஒருங்கிணைந்த பண்ணைய முறை பல்வேறு வேளாண் தட்பவெப்ப மண்டலப் பகுதிகளில் 2018–2019 ஆம் ஆண்டில் முன்னோடித் திட்டமாக,

அறிமுகப்படுத்தப்பட்டது. இதுவரை, 2,500 ஒருங்கிணைந்த பண்ணை அலகுகளுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. **2019–2020 ஆம் ஆண்டில் மேலும் 5,000 ஒருங்கிணைந்த பண்ணை அலகுகள் 25 மாவட்டங்களில் 101.62 கோடி ரூபாய் திட்டச் செலவில் கூடுதலாக அமைக்கப்படும்.**

26. பெரு விவசாயிகள் அடையும் பொருளாதாரப் பயன், தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்திக்கொள்ளுதல் போன்ற பல்வேறு பயன்களை சிறு, குறு விவசாயிகளும் பெற 2017–2018 ஆம் ஆண்டில் புதுமை முயற்சியாக 'கூட்டுப் பண்ணைய திட்டத்தை' இந்த அரசு அறிமுகப்படுத்தியது. சிறு, குறு விவசாயிகள் கொண்ட, உழவர் ஆர்வலர் குழுக்கள் (Farmers Interest Groups) தொடங்கப்பட்டு, அத்தகைய உழவர் ஆர்வலர் குழுக்களை ஒருங்கிணைத்து உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் (Farmers Producer Groups) உருவாக்கப்படுகிறது. இறுதியாக உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளாக (Farmer Producer Company) உருவாகும் வகையில், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை, மாநிலத்தில் 20,000 உழவர் ஆர்வலர் குழுக்களும், 4,000 உழவர் உற்பத்தியாளர் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 483 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், அரசு மற்றும் நபார்டு வங்கி போன்ற இதர முகமைகள் மூலம் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன. **2019–2020 ஆம் ஆண்டில், 100.42 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், 2,000 உழவர் உற்பத்தியாளர் குழுக்களும், 100 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளும் அமைக்கப்படும். உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் நிலைத்துச் செயல்பட அவற்றை ஒருங்கிணைப்பது அவசியத் தேவையாக உள்ளது. உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை மாநில அளவிலும், மண்டல அளவிலும் ஒருங்கிணைப்பதற்கான முயற்சிகளை அரசு எடுத்து வருகிறது.**

**உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு ஊக்கமளிக்க, தமிழ்நாடு உழவர் உற்பத்தியாளர் அமைப்புக் கொள்கை ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது.**

27. வேளாண் பொருட்களின் விலையில் உள்ள நிலையற்ற தன்மையால் வேளாண்மையின் நிலைத்தன்மை பெரும் பாதிப்பைச் சந்திக்கின்றது. அதிக உற்பத்தி சில நேரங்களில் விற்பனை விலையில் சரிவை ஏற்படுத்துகிறது. எனவே, முக்கியமான வேளாண் பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை உறுதிப்படுத்துவதற்கு இந்த அரசு சிறப்பு முன்னுரிமை வழங்கி வருகிறது. சாதாரண ரகம் மற்றும் சன்ன ரகம் நெல்லுக்கு முறையே குவிண்டாலுக்கு கொள்முதல் விலையாக 1,800 ரூபாயையும், 1,840 ரூபாயையும் வரும் பயிர் பருவத்தில் இந்த அரசு வழங்கும். இதில் மாநில அரசின் ஊக்கத்தொகையாக, சாதாரண ரகம் மற்றும் சன்ன ரகம் நெல்லுக்கு, முறையே குவிண்டாலுக்கு 50 ரூபாயும், 70 ரூபாயும் அடங்கும். 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நெல் கொள்முதலுக்கான ஊக்கத்தொகைக்காக 180 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குறைந்தபட்ச ஆதரவு விலை திட்டத்தின் கீழ், பெரிய அளவில் உளுந்தை கொள்முதல் செய்யும் திட்டம் தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2019–2020 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். கரும்பிற்கு மத்திய அரசு அறிவித்த நியாயமான மற்றும் ஆதாய விலையினை விட (Fair and Remunerative Price) கூடுதலாக 2018–2019 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வரும் கரும்பு உற்பத்தி ஊக்கத்தொகையானது, 2019–2020 ஆம் ஆண்டிலும் வழங்கப்படும். இதற்கென 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

28. நியாயமான விலை நிர்ணயம் செய்யவும், விலை ஏற்றத்தாழ்வினால் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்பைத் தடுப்பதற்கும்,

சந்தை ஒருங்கிணைப்பு முக்கியப் பங்காற்றுகிறது. தேசிய வேளாண் மின்னணுச் சந்தை திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான மின்னணு வர்த்தகம், ஒருமுனை வரிவிதிப்பு மற்றும் ஒரே உரிமம் ஆகியவற்றை உள்ளடக்கி, 1987 ஆம் ஆண்டு, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டமும் அதன்கீழான 1991 ஆம் ஆண்டு விதிகளுக்கும் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும், 23 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும், 8 வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்க விற்பனை அரங்குகளிலும் பெரிய அளவிலான மேம்பாட்டுப் பணிகளையும் புதிய வசதிகளையும் ஏற்படுத்தும் பணிகள், மத்திய அரசின் உதவி மற்றும் நபார்டு வங்கி கடனுதவியுடன், 159.25 கோடி ரூபாய் திட்ட மதிப்பில் நடைபெற்று வருகின்றன. இதுதவிர, கூடுதலாக 70 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை தேசிய வேளாண் மின்னணுச் சந்தை திட்டத்தின் கீழ் 2019–2020 ஆம் ஆண்டில் ஒருங்கிணைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. சேமிப்புக் கிடங்கின் கொள்ளளவை அதிகரிப்பதற்கு இந்த அரசு பெரிய அளவில் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 2011 ஆம் ஆண்டு முதல், கூட்டுறவு ஒழுங்குமுறை விற்பனை நிலையங்களிலும், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் கீழும், 9.42 இலட்சம் மெட்ரிக் டன் கூடுதல் கொள்ளளவு கிடங்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

29. வேளாண் தொழிலாளர்களின் பயன்பாட்டுத் திறனை அதிகரிக்கவும், சாகுபடி செலவுகளைக் குறைக்கவும் தமிழ்நாட்டில் வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டத்திற்கு தீவிரமான ஊக்கம் அளிக்கப்படுகிறது. அரசின் நிதியுதவியுடன் தொடங்கப்பட்ட 1,965 வேளாண் இயந்திர வாடகை மையங்கள் ஏற்கெனவே மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியத்துடன் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**வரும் நிதியாண்டில் 128 வட்டார அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்களையும், 360 கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்களையும் நிறுவவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டில் வேளாண் இயந்திரமயமாக்கலுக்காக 172.06 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

30. பயிர் பரவலாக்கலின் ஒரு பகுதியாக, விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க பூக்கள், பழங்கள் மற்றும் காய்கறிகள் போன்ற தோட்டக்கலை விளைபொருட்களை விளைவிக்க பெருமளவில் ஊக்கமளிக்கப்படுகிறது. காய்கறிகள் மற்றும் பழங்களுக்கான விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம் 10 மாவட்டங்களில் 482.36 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், 62 முதன்மை பதப்படுத்தும் மையங்களிலும், 509 சேகரிப்பு மையங்களிலும், சேகரிப்பு, சந்தைப்படுத்துதல், சேமிப்பு, பதப்படுத்துதல் மற்றும் குளிர்பதன வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம், மாநிலத்தில் அறுவடைக்குப் பிந்தைய உட்கட்டமைப்பிற்கான பெரும் வசதிகளை இத்திட்டம் ஏற்படுத்தியுள்ளது. **பழங்கள் மற்றும் காய்கறிகள் சாகுபடி செய்வதை ஊக்குவிக்கும் முதலமைச்சரின் சிறப்புத் திட்டம் 2019–2020 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும். இதற்கென 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநில அரசின் தோட்டக்கலை பண்ணைகளின் மூலம் உண்மைத் தன்மையை சரிபார்த்து வில்லை ஒட்டிய காய்கறி விதைகளை (Truthfully labelled vegetable seeds) உற்பத்தி செய்து, தேவைப்படும் இடங்களில் போதிய அளவு விநியோகிக்கப்படும். ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கத்திற்காக 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

31. 2018 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உணவு பதப்படுத்தும் கொள்கை சமீபத்தில் அரசால் வெளியிடப்பட்டது. தமிழ்நாட்டில் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளை அதிகளவில் அமைத்திடவும், தற்போதைய வேளாண் வணிகச் சூழலை மாற்றி அத்தகைய தொழிற்சாலைகள் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்படும் வகையிலும் இந்தக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த வரவு–செலவுத் திட்ட அறிக்கையில் அறிவிக்கப்பட்ட 10 உணவு பதப்படுத்தும் பூங்காக்கள் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. உணவு பதப்படுத்தும் துறையில் முதலீடு செய்வதற்கு தனியார் முதலீட்டாளர்கள் ஆர்வமுடன் உள்ளனர் என்பதையும், பிரான்ஸ் நாட்டு நிறுவனம் சென்னைக்கு அருகில் ஒருங்கிணைந்த உணவு பதப்படும் பூங்காவை 2,000 கோடி ரூபாய் முதலீட்டில் அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு பண்ணை சாரா வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காக, மாபெரும் உணவு பதப்படுத்தும் பூங்காக்களை அமைக்க இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும். உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைப்பதை வலுப்படுத்துவதற்காக, தமிழ்நாடு உழவர் உற்பத்தியாளர் அமைப்புக் கொள்கை விரைவில் வெளியிடப்படும்.

32. மாநிலத்தில் பல்வேறு வேளாண் பருவநிலை மண்டலங்கள் (agro climatic zones) உள்ளதால், ஏற்றுமதிக்கு ஏற்ற பல்வகை வேளாண் பயிர் சாகுபடி மூலம் ஏற்றுமதியை அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன. **வேளாண் பொருட்களின் ஏற்றுமதியின் முக்கியத்துவத்தை இந்த அரசு உணர்ந்துள்ளதால், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்ககத்தில் ஒரு சிறப்பு வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டு அலகினை**

(Export Promotion Cell) **இந்த அரசு ஏற்படுத்தும். இயற்கை வேளாண்மை (organic farming) மற்றும் பிற தரச்சான்றிதழ் அளித்தல், விவசாயிகளுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் ஊக்கத்தொகை வழங்குதல் போன்ற அனைத்து ஏற்றுமதி சம்பந்தமான ஊக்குவிப்பு நடவடிக்கைகளை இந்த மையம் ஒருங்கிணைத்து செயல்படுத்தும். இயற்கை வேளாண்மையை மேம்படுத்துவதற்கு, மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இயற்கை வேளாண்மை சான்று அளிக்கும் மையங்கள் அமைக்கப்படும் என்பதையும் இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

33. காலத்திற்கேற்ப மாறிவரும் விவசாயத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், வேளாண்மைக் கல்வி மற்றும் ஆராய்ச்சி வசதிகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட வேண்டும். 2011 ஆம் ஆண்டு முதல் நான்கு புதிய கல்லூரிகளைத் தொடங்கியும், 23 புதிய தனியார் கல்லூரிகளைத் தொடங்க அனுமதி அளித்தும், வேளாண்மைக் கல்வி மற்றும் ஆராய்ச்சியை விரிவுபடுத்துவதில் மாநில அரசு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகின்றன. **2019–2020 ஆம் ஆண்டில் அரசு வேளாண்மைக் கல்லூரிகள் மற்றும் தோட்டக்கலைக் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை தொடர்ந்து மேம்படுத்துவதற்காக 79.73 கோடி ரூபாய் செலவிடப்படும்.**

34. **2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்திற்காக 300 கோடி ரூபாயும், நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்திற்காக 87.22 கோடி ரூபாய் உட்பட வேளாண்மைத் துறைக்கு 10,550.85 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**கூட்டுறவு**

35. பயிர்க் கடன்களை வழங்குவதற்கும், வேளாண் விளைபொருட்களை சந்தைப்படுத்துவதற்கும் மாநிலத்தில் வலுவான கூட்டுறவு அமைப்புகள் செயல்படுகின்றன. 2018–2019 ஆம் ஆண்டில், பயிர்க் கடன் வழங்க 8,000 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 9.37 இலட்சம் விவசாயிகளுக்கு 6,118 கோடி ரூபாய் அளவிற்கு பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. உரிய காலத்தில் பயிர்க் கடனைத் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு வட்டி முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்படுகிறது. தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விவசாயிகளுக்கு வேளாண் விளைபொருட்கள் மீதான அடமானக் கடனையும் (produce pledge loan) வழங்குகின்றன. **2019–2020 ஆம் ஆண்டில், 10,000 கோடி ரூபாய் அளவிற்கு பயிர்க் கடன் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தவிர, பயிர்க் கடன்கள் மீதான வட்டித் தள்ளுபடிக்காக 200 கோடி ரூபாய் வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம்**

36. வேளாண்மையின் அங்கமாகக் கருதப்படும் கால்நடை பராமரிப்புத் துறை கிராமப்புறப் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது. 2011–2012 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 75,448 பெண்கள் பயன்பெற்றுள்ளனர். இத்திட்டம் 2019–2020 ஆம் ஆண்டில் 49.83 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 2011–2012 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட விலையில்லா வெள்ளாடுகள் அல்லது செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 8.72 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன.

2019–2020 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 198.75 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று, தீவன அபிவிருத்தித் திட்டமும் 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். ‘அசீல்’ இன நாட்டுக்கோழி வளர்ப்பினை ஊக்கப்படுத்துவதற்காக, 2018–2019 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட சிறப்புத் திட்டம் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2019–2020 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். கிராமப்புறங்களில் உள்ள பேரூராட்சிகளிலும் வரும் ஆண்டு முதல் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

37. கால்நடை பராமரிப்புத் துறையின் உட்கட்டமைப்பை இந்த அரசு பெருமளவில் வலுப்படுத்தியுள்ளது. 2011–2012 ஆம் ஆண்டு முதல் இந்த அரசு 325 புதிய கால்நடை கிளை நிலையங்களை உருவாக்கியுள்ளதுடன், 1,035 கால்நடை கிளை நிலையங்களை கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தியும், 20 புதிய கால்நடை மருந்தகங்களைத் தோற்றுவித்தும், ஐந்து கால்நடை மருந்தகங்களை கால்நடை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தியும், ஐந்து பெருமருத்துவமனைகளையும் ஒரு கால்நடை மருத்துவமனையையும் கால்நடை பன்முக மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தியும் உள்ளது. 2011–2012 ஆம் ஆண்டு முதல், கால்நடை நிலைய கட்டடங்கள் கட்டுவதற்காக 557.28 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இந்த முயற்சிகளை 2019–2020 ஆம் ஆண்டிலும் தொடர, கால்நடை நிலைய கட்டடங்கள் கட்டுமானத்திற்காக 60.27 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

38. ஆவின் நிறுவனமும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும் மாநிலத்தின் பால் உற்பத்தியை அதிகரிக்க முக்கியப் பங்காற்றுகின்றன. பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில்,

பால் பதப்படுத்துதல் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் பால் உற்பத்தி உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்தின் கீழ், 237.27 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மூன்று திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு திட்ட ஆய்வுக் குழு அனுமதியளித்துள்ளது. இத்திட்டங்களுக்கான ஒப்புதல்கள் தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்திடமிருந்து விரைவில் எதிர்நோக்கப்படுகிறது. 2019–2020 ஆம் ஆண்டில் பால் பதப்படுத்துவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்கு 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **மரபுத் திறன் மிக்க நாட்டின மற்றும் கலப்பினக் காளைகளைக் கொண்டு 100 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் புதிய உறைவிந்து உற்பத்தி நிலையம் அமைக்கப்படும் என்பதை இத்தருணத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.** 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்திற்கான மதிப்பீடுகளில் கால்நடை பராமரிப்புத் துறைக்கு 1,252.41 கோடி ரூபாயும், பால்வளத் துறைக்கு 258.45 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**மீனளம்**

39. மீனவர்களின் நலனைப் பேணவும், தமிழ்நாட்டில் மீனளத் துறையின் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கான மீன்பிடி உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்து வருகிறது. மீன்பிடி தடைக்காலத்திலும், மீன்பிடி குறைவாக உள்ள காலத்திலும் வழங்கப்படும் உதவித்தொகைத் திட்டத்திற்காக 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 170.13 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பாக் விரிகுடா பகுதியில் 2,000 இழுவலை மீன்பிடிப் படகுகளை 1,600 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்து உரிய மாற்றம்

செய்வதற்கான சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் முதற்கட்டமாக, 500 இழுவலைப் படகுகளை, தூண்டில் மற்றும் செவுள்வலையுடன் கூடிய ஆழ்கடல் சூரை மீன்பிடி படகுகளாக மாற்றிட மொத்தம் 286 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மூக்கையூர் மற்றும் குந்துக்கல் ஆகிய இடங்களில் 185 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டிலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள பூம்புகார் மீன்பிடி துறைமுகத்தில் 148 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மீன்பிடி உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. மூக்கையூர் மற்றும் பூம்புகார் துறைமுகங்களில் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. குந்துக்கல் மீன்பிடி துறைமுகப் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. **இது தவிர 420 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் வெள்ளப்பள்ளம், தரங்கம்பாடி மற்றும் திருவொற்றியூர் குப்பம் ஆகிய இடங்களில் மீன்பிடி துறைமுகங்களைக் கட்டுவதற்கும் இந்த அரசு அனுமதி அளித்துள்ளதுடன், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நீரோடி, மார்த்தாண்டத்துறை மற்றும் வில்லவிளை ஆகிய இடங்களில் கடலரிப்புத் தடுப்பான்களை 116 கோடி ரூபாய் செலவில் அமைப்பதற்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்பதை இங்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகின்றேன்.**

40. ஒகி புயலுக்குப் பின்னர், கடலில் மீன்பிடிக்கச் செல்லும் படகுகளிலிருந்து கடலோர பகுதிகளைத் தொடர்பு கொள்ளும் வசதிகளை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுத்துள்ளது. சீரான தொலைதொடர்பு வசதிகளை ஏற்படுத்தும் திட்டத்தின் கீழ், 1,076 கிலோமீட்டர் நீளமுள்ள கடற்கரைப் பகுதிகளில், 18 உயர்மட்டக் கோபுரங்களும், கடற்கரை சார்ந்த உபகரணங்கள் கொண்ட 18 கட்டுப்பாட்டு அறைகளும், பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு

5 வாட் கம்பியில்லா கையடக்கக் கருவிகளும், மீன்பிடி விசைப்படகுகளுக்கு 25 வாட் கம்பியில்லா கையடக்கக் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 1,600 மீன்பிடி விசைப்படகுகளுக்கு ஆபத்துக்கால எச்சரிக்கை கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இது தவிர, 500 மீன்பிடி விசைப்படகுகளுக்கு பரிசோதனை முறையில் பொருத்தப்பட்டுள்ள 'டிரான்ஸ்பாண்டர்கள் (Transponders)' உதவியுடன் ஆபத்துக் காலங்களில் 200 கடல்மைல் தூரம் ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள இந்த மீன்பிடி விசைப்படகுகளை கண்காணிக்க இயலும். **வரும் ஆண்டில் 80 ஆழ்கடல் மீன்பிடி படகுக் குழுக்களுக்கு 240 நேவிக் தகவல் பெறும் கருவிகள், 160 ஐசாட்–2 செயற்கைக்கோள் தொலைபேசிகள் மற்றும் 160 நேவ்டெக்ஸ் கருவிகளையும் அரசு வழங்கும்.** 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மீனளத் துறைக்காக 927.85 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நீர்வள ஆதாரங்கள் மற்றும் பாசனம்**

41. தமிழ்நாடு நீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலம் என்பதால் நீர் சேமிப்புக் கொள்ளளவை உயர்த்தி நீர் வளத்தைப் பாதுகாப்பதற்கும், நீர்ப் பயன்பாட்டுத் திறனை அதிகரிப்பதற்கும் அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. நீர் ஆதாரங்களை பராமரித்துப் பாதுகாக்கவும், பொதுமக்கள் பங்கேற்புடன் பாரம்பரியமான 'குடிமராமத்து' முறைக்கு இந்த அரசு புத்துயிர் அளித்துள்ளது. **2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பொதுப்பணித் துறையின் கீழ் உள்ள ஏரிகளை மக்கள் பங்களிப்புடன் புனரமைக்கும் 'குடிமராமத்து' திட்டத்திற்கு 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் உள்ள சிறிய பாசன ஏரிகளையும் புனரமைப்பதற்கு மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் இது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.**

42. ‘நீர்வள நிலவளத் திட்டம்’ சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, 30 மாவட்டங்களில் உள்ள 66 உப வடிநிலப் பகுதிகளில் அமைந்துள்ள 5.43 இலட்சம் ஹெக்டேர் ஆயக்கட்டு நிலங்கள் பயனடையும் வகையில், 2,962 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (Irrigated Agricultural Modernisation Project) செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 4,778 ஏரிகளையும், 477 அணைக்கட்டுகளையும் புனரமைப்பதற்காகவும், தடுப்பணைகளைக் கட்டுவதற்காகவும், ஏரியின் நீர்ப்பரப்புப் பகுதியில் செயற்கை முறையில் நீர்செறிவூட்டும் கிணறுகளை அமைப்பதற்காகவும், காவேரி பாசனப் பகுதி மற்றும் பிற உப வடிநிலங்களில் அமைந்துள்ள வடிகால்களையும், பாசன வாய்க்கால்களையும் மேம்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்திற்காக 235.02 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

43. பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கத்தை தணிப்பதற்காக, காவேரி பாசனப் பகுதிகளில் ‘பருவநிலை மாற்றத் தழுவல் திட்டத்தை’ ஆசிய வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன் 1,560 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் முதற்கட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள 960.66 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக 478.73 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

44. தமிழ்நாட்டில் உள்ள 89 அணைகளில் 745.49 கோடி ரூபாய் செலவில் உலக வங்கி கடனுதவியுடன் ‘அணைகள் புனரமைப்பு மற்றும்

மேம்பாட்டுத் திட்டம்' செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 43 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **இத்திட்டத்தைத் தொடர்ந்து 37 அணைகள் மற்றும் அணை சார்ந்த கட்டமைப்புகளைப் புனரமைத்து, மேம்படுத்தும் பணிகளை, அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டத் திட்டமாக மேற்கொள்வதற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் 2020–2021 ஆம் ஆண்டு முதல், ஐந்தாண்டு காலத்தில் 610.26 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.**

45. அத்திக்கடவு–அவிநாசி திட்டம் விரைவில் தொடங்க உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்காக, வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், **இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, சுய பயன்பாட்டிற்கு மின்சாரம் உற்பத்தி செய்து வழங்குவதற்கான சூரியஒளி மின்திட்டத்தை, நபார்டு வங்கி நிதியுதவியுடன் 132.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.**

46. நபார்டு வங்கி நிதியுதவியுடன் பல்வேறு நீர் ஆதார அமைப்புகளின் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2,712.26 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 380 திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நபார்டு திட்டங்களின் கீழ் பல்வேறு பணிகளை 2019–2020 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு வரவு–செலவுத் திட்டத்தில் 811.60 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில்

நீர்வள ஆதாரங்கள் மற்றும் பாசனத் துறைக்கு 5,983.98 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுற்றுச்சூழல் மற்றும் வனம்**

47. பருவநிலை மாற்றத் தழுவல் மற்றும் பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளைத் தணிப்பதில் வனங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. 2017 ஆம் ஆண்டு இந்திய வனநிலை அறிக்கையின்படி, மாநிலத்தின் வனம் மற்றும் மர அடர்த்திப் பரப்பளவு, மொத்த நிலப்பரப்பில் 23.80 சதவீதம் ஆகும். ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதியுதவியுடன் 686 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 2011–2012 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட 'தமிழ்நாடு பல்லுயிரினப் பாதுகாப்பு மற்றும் பசுமைத் திட்டம்', 2018–2019 ஆம் ஆண்டில் நிறைவடைய உள்ளது. **நகர்மயமாதல் மற்றும் நகர்ப்புர வளர்ச்சியின் காரணமாக சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள பாதுகாக்கப்பட்ட வனங்களில் ஆக்கிரமிப்புகள் மற்றும் குப்பைகள் கொட்டுதல் போன்ற செயல்களால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டில் கான்கிரீட் மற்றும் உயிர்வேலி அமைத்து சென்னை நகரைச் சுற்றியுள்ள பாதுகாக்கப்பட்ட வனங்களைக் காப்பதற்கு 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.**

48. அடையாறு மற்றும் கூவம் நதிகளின் மறுசீரமைப்பிற்கு முறையே, 555.46 கோடி ரூபாய் மற்றும் 604.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், பருத்திப்பட்டு ஏரியில் சுற்றுச்சூழல் மீட்டெடுப்புப் பணிகள் 28.16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. பசுமை பருவநிலை நிதியத்தின் கீழ் ஒப்புதலை எதிர்நோக்கி, 'பள்ளிக்கரணை சதுப்புநில மீட்டெடுப்பு திட்டத்தை' 165.68 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த இந்த அரசு

அனுமதித்துள்ளது. 2018–2019 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 20.30 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சூழல் மேம்பாட்டுப் பணிகளுக்காகவும், இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

49. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 445.05 கோடி ரூபாய் மற்றும் 31.78 கோடி ரூபாய், முறையே வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**பொது விநியோகத் திட்டம்**

50. மாநிலத்தில் தற்போது 18.64 இலட்சம் அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைகள் உட்பட மொத்தமாக 2.01 கோடி குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளன. 2013 ஆம் ஆண்டு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கிய அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. பொது விநியோகத் திட்டம் கணினிமயமாக்கப்பட்டு, ஸ்மார்ட் அட்டைகள் வழங்கப்பட்டதன் பலனாக, இத்திட்டத்தின் செயல்பாடுகள் மேம்பட்டுள்ளன. சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ், 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை 1.56 இலட்சம் டன் துவரம் பருப்பையும், 1.50 இலட்சம் டன் சமையல் எண்ணெயையும் இந்த அரசு மானிய விலையில் வழங்கியுள்ளது. மண்ணெண்ணெய்க்கு வழங்கப்பட்டு வந்த மானியத்தை மத்திய அரசு நிறுத்திவிட்ட போதும், குடும்ப அட்டைதாரர்களுக்கு மானிய விலையில் மண்ணெண்ணெய் இந்த அரசால் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. **பொங்கல் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 1,000 ரூபாய் வழங்கப்படும் என ஏற்கெனவே**

**அறிவித்தபடி, 1,985.46 கோடி ரூபாயை இந்த அரசு வழங்கியுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 6,000 கோடி ரூபாய் உணவு மானியத்திற்காகவும், பொது விநியோகத் திட்டத்தை கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுத்துவதற்கு நிதியுதவியாக 333.81 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.**

**உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பகிர்வு**

51. 2018–2019 ஆம் ஆண்டு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 5,901.88 கோடி ரூபாயும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு 4,637.19 கோடி ரூபாயும் மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்குவதற்காக, முறையே 6,573.61 கோடி ரூபாயும், 5,164.98 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய நிதிக்குழு பரிந்துரைப்படி 2017–2018 ஆம் ஆண்டிற்கான சிறப்பு செயல்பாட்டு நிதியுதவியாக வழங்கப்பட வேண்டிய 560.15 கோடி ரூபாயை மத்திய அரசு இதுவரை விடுவிக்கவில்லை. 2018–2019 ஆம் ஆண்டிற்கான பொதுவான அடிப்படை நிதியுதவியாகவும், சிறப்பு செயல்பாட்டு நிதியுதவியாகவும் 3,852.17 கோடி ரூபாயையும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு விடுவிக்க வேண்டியுள்ளது. எனினும், 2019–2020 ஆம் ஆண்டிற்கான மத்திய நிதிக்குழு பரிந்துரையின்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியத்திற்காக 5,178.52 கோடி ரூபாய் இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஊரக வளர்ச்சி**

52. அனைத்து கிராமங்களிலும் அடிப்படை வசதிகளையும், உட்கட்டமைப்பு வசதிகளையும் போதுமான அளவிற்கு ஏற்படுத்த அரசு

முன்னுரிமை வழங்கி வருகிறது. பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து, அனைத்து கிராமங்களிலும் இணைப்புச் சாலைகள் அமைத்தல், குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள் அமைத்தல் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தித் தருதல் போன்ற பல்வேறு பணிகளில் இந்த அரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. 2018–2019 ஆம் ஆண்டில் கிராமப்புற சாலை மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களின் கீழ் 1,077.46 கோடி ரூபாய் பயன்படுத்தப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிலும், அதே போன்ற முயற்சிகள் எடுக்கப்பட்டு 1,200 கோடி ரூபாய் அளவிற்கு பல்வேறு திட்டங்களிலிருந்து நிதி ஒருங்கிணைக்கப்பட்டு, கிராமப்புற சாலைப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும். மேலும், 20.05 இலட்சம் தெரு விளக்குகள் ஒளி உமிழும் (LED) மின் விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளன. இதன் பலனாக, மின்சாரக் கட்டணத்தில் ஆண்டுக்கு 74 கோடி ரூபாய் சேமிக்கப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட சுகாதாரம் குறித்த கணக்கெடுப்பிற்குப் பிறகு, மாபெரும் சாதனையாக, கிராமங்களில் 48.94 இலட்சம் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்பட்டதால், அனைத்து மாவட்டங்களும் திறந்தவெளியில் மலம் கழிக்காத நிலையை எட்டிய மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. தூய்மை இந்தியா இயக்கத்திற்காக (கிராமம்) இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 400 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

53. நிலையான சொத்துக்களை உருவாக்கும் வகையில், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், மாநிலத்தில் முழு உத்வேகத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான அரசின் முயற்சிகளை 2019–2020 ஆம் ஆண்டிலும் தொடர்வதற்காக 250 கோடி ரூபாய் பொருட்செலவிற்கான மாநில அரசின் பங்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

54. கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு கான்கிரீட் வீடுகளைக் கட்டித் தருவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. ஏற்கெனவே அறிவித்தபடி, 25 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டு, பழுதடைந்த நிலையில் உள்ள 45,594 வீடுகளை 227.97 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பழுது நீக்கம் மற்றும் மறுகட்டுமானம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டத்தின் (ஊரகம்) கீழ், 2019–2020 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் வீடுகள் கட்டுவதற்கு இந்த அரசு உத்தேசித்துள்ளது. ஒரு வீட்டிற்கு அலகுத் தொகையாக 1.20 இலட்சம் ரூபாய் என மத்திய அரசு நிர்ணயித்து, அத்தொகையை மத்திய அரசும், மாநில அரசும் முறையே 60 சதவீதம் மற்றும் 40 சதவீதம் என ஏற்றுள்ளபோதிலும், கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்காக மாநில அரசு, கூடுதல் நிதியாக 50,000 ரூபாயை ஒவ்வொரு வீட்டிற்கும் வழங்குகிறது. இதனால், ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை 1.70 இலட்சம் ரூபாயாகவும், அதில் மாநில அரசின் பங்குத் தொகை 98,000 ரூபாயாகவும் உள்ளது. **2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,276.14 கோடி ரூபாய் பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டத்திற்காக (ஊரகம்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டைப் போன்றே, வரும் ஆண்டிலும் மாண்புமிகு முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் 20,000 வீடுகள் கட்டித் தரப்படும். இத்திட்டத்திற்காக, 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் 420 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

55. **2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 18,273.96 கோடி ரூபாய் ஊரக வளர்ச்சித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**நகராட்சி நிர்வாகம்**

56. அதிக அளவில் நகர்மயமான மாநிலமான தமிழ்நாட்டில் நகர்ப்புர அடிப்படைக் கட்டமைப்பை மேம்படுத்தி, மாநகரங்களிலும், நகரங்களிலும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது அவசியமாகிறது. மாநகரப் பகுதிகளிலும், நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் குடிநீர் விரிவாக்கம், பாதாளச் சாக்கடை, வெள்ளநீர் வடிகால் போன்றவற்றை உருவாக்குதல், சாலைகள் மேம்பாடு ஆகியவற்றிற்கு இந்த அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான திட்ட (Atal Mission for Rejuvenation and Urban Transformation) நிதியை ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் ‘தமிழ் நாடு நகர்ப்புர முன்னோடி முதலீட்டுத் திட்டத்தின்’ (Tamil Nadu Urban Flagship Investment Programme) நிதியுடன் ஒருங்கிணைத்து, குடிநீர் வழங்கல் மற்றும் பாதாளச் சாக்கடை அமைப்புகள் ஏற்படுத்துவதற்கான மேம்பட்ட உட்கட்டமைப்புத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நகர்ப்புர சாலைகள், மழைநீர் வடிகால் மற்றும் தெரு விளக்குகள் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (IUDM), சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் (Chennai Mega City Development Mission) மூலமும், திறன்மிகு நகரங்கள் திட்டங்களின் கீழ் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கான பணிகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

57. திறன்மிகு நகரங்கள் மற்றும் அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான (அம்ருத்) திட்டங்களை தமிழ்நாடு செம்மையாகச் செயல்படுத்தி வருகிறது. ‘திறன்மிகு நகரங்கள்’ திட்டத்தின் கீழ், 11,776 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 326 திட்டங்களைச்

செயல்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்காக 1,650 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அம்ருத் திட்டத்தில் 445 பணிகள் 11,441.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் 8,155.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் நகர்ப்புர முன்னோடி முதலீட்டுத் திட்ட நிதியிலிருந்து அம்ருத் திட்டத்திற்குத் தேவைப்படும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்குத் தொகை வழங்கப்படுகிறது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், அம்ருத் திட்டத்திற்காக 1,450 கோடி ரூபாயும், ‘தமிழ்நாடு நகர்ப்புர முன்னோடி முதலீட்டுத் திட்டத்திற்காக’ 302 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி இயக்கத்திற்காக 750 கோடி ரூபாயும், சென்னைப் பெருநகர வளர்ச்சி இயக்கத்திற்காக 500 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

58. உலக வங்கி நிதியுதவியுடன், 3,831 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், 2015 ஆம் ஆண்டு முதல் ‘தமிழ்நாடு நிலையான நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தை’ (Tamil Nadu Sustainable Urban Develoment Programme) மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 17 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், இதுவரை 1,631.44 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ‘தமிழ்நாடு நிலையான நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்திற்கு’ 836.39 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், நபார்டு வங்கி நிதியுதவியுடன் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளை பேரூராட்சிகளில் 2019–2020 ஆம் ஆண்டில் இந்த அரசு மேற்கொள்ளும்.

**59. பெருநகர சென்னை மாநகராட்சிக்கான விரிவான திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. எட்டு மண்டலங்களில் இரண்டு தொகுப்புகளாக திடக்கழிவுகளை சேகரித்துக் கொண்டு செல்வதற்கான திட்டத்தை 1,546.04 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்துவதற்கு அரசு நிர்வாக அனுமதி அளித்துள்ளது. கொடுங்கையூர் மற்றும் பெருங்குடியில் உள்ள குப்பை கொட்டும் இடங்களை சுத்திகரிப்பு செய்து அந்த இடங்களை மீட்டெடுப்பதற்கும், கழிவில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் அலகினை அமைப்பதற்குமான திட்டத்தை அரசு–தனியார் பங்களிப்பு முறையில், 5,259.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு அரசு விரைவில்அனுமதி அளிக்கும்.**

**60. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்காக 18,700.64 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**குடிநீர் விநியோகம்**

61. மாநில அரசானது ‘தேசிய ஊரகக் குடிநீர் திட்டம்’ ‘குறைந்தபட்ச தேவைகள் திட்டம்’ ஆகிய திட்டங்களின் கீழ், குடிநீர் வழங்கலுக்கான கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதுடன், நபார்டு வங்கியின் கடனுதவியுடனும் குடிநீர்த் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 2018–2019 ஆம் ஆண்டில் பகுதியளவு குடிநீர் வசதி வழங்கப்பட்ட 2,310 குடியிருப்புப் பகுதிகளில் முழு அளவு குடிநீர் வசதி வழங்குவதற்கான திட்டப் பணிகளை மேற்கொண்டுள்ள நிலையில், மீதமுள்ள 2,017 குடியிருப்புப் பகுதிகளில் 2019–2020 ஆம் ஆண்டில் முழு அளவு குடிநீர் வசதியை வழங்குவதற்கான பணிகளை மேற்கொள்ளும்.

**கரூர் மாவட்டம் க.பரமத்தி ஒன்றியம் மற்றும் அரவக்குறிச்சி ஆகிய இடங்களில் உள்ள 282 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி வழங்குவதற்கான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் உட்பட பல்வேறு பணிகள், 2019–2020 ஆம் ஆண்டில் 1,558.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 'தேசிய ஊரகக் குடிநீர் திட்டத்திற்காகவும்', 'குறைந்தபட்ச தேவைகள் திட்டத்திற்காகவும்', நபார்டு திட்டப் பணிகளுக்காகவும், முறையே 364.76 கோடி ரூபாய், 286 கோடி ரூபாய், 600 கோடி ரூபாய் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.**

62. நான்கு நகராட்சிகள், 12 பேரூராட்சிகள் மற்றும் 3,500 ஊரகக் குடியிருப்புகளில் வசிக்கும் 23.55 இலட்சம் மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய வகையில், 12 பெரிய குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களை 1,132.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுத்தி வருகிறது. இவற்றுடன், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும், 4,944 ஊரகக் குடியிருப்புகளிலும் வசிக்கும் ஏறத்தாழ 1.55 கோடி மக்கள் பயனடையும் வகையில், 7,708.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கும், பாதாள சாக்கடைத் திட்டங்களுக்குமான கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

63. கழிவுநீரை சுத்திகரித்து, குடிநீர் அல்லாத பிற பயன்பாடுகளுக்காகப் பயன்படுத்துவதை இந்த அரசு ஊக்குவித்து வருகிறது. இதனால் குடிநீருக்குப் பயன்படும் நன்னீர் பாதுகாக்கப்படும். சுமார் 45 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலைவரை சுத்திகரிப்பு செய்யும் நிலையத்தை கோயம்பேட்டில் 296.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

வடசென்னைப் பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் மற்றும் மின்உற்பத்தி நிலையங்களுக்கு, நன்னீருக்குப் பதிலாக, கழிவுநீரை சுத்திகரித்து வழங்குவதற்காக, கொடுங்கையூரில் நாள் ஒன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட மூன்றாம் நிலைவரை சுத்திகரிப்பு செய்யும் நிலையத்தை 235 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைப்பதற்கான பணிகளை சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மேற்கொண்டு வருகிறது. நன்னீரைப் பாதுகாக்கும் பொருட்டு, கழிவுநீரை சுத்திகரித்துப் பயன்படுத்துவதற்கான இதுபோன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு இந்த அரசு தொடர்ந்து ஊக்கமளிக்கும்.

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர மேம்பாடு**

64. 2011 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, 48.45 சதவீத மக்கள் நகர்ப்புரங்களில் வசித்து வரும் நிலையில், அவர்களில் 14.63 இலட்சம் குடும்பங்கள் குடிசைப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். **2030 ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் போதிய, பாதுகாப்பான, வாங்கும் திறனுக்கேற்ற வீட்டுவசதியும், அடிப்படை வசதிகளும் கிடைக்க வழிவகை செய்வதுடன், குடிசைப் பகுதிகளை மேம்படுத்தும் இலக்கினை அடைவதற்காக மாநில நகர்ப்புர வீட்டுவசதி மற்றும் குடியிருப்புக் கொள்கையை இந்த அரசு விரைவில் வெளியிடும். ஏழை, நடுத்தரக் குடும்ப மக்களும் வீட்டுவசதிச் சந்தையை எளிதில் அணுகி அவர்கள் வாங்கக்கூடிய விலையில் வீட்டுவசதி பெற வழிவகை செய்வதை அரசு உறுதி செய்யும்.**

65. ஏழைகளுக்கு வீட்டு வசதியை ஏற்படுத்த 2014–2015 ஆம் ஆண்டிலிருந்து, ‘பிரதம மந்திரி வீட்டுவசதி (நகர்ப்புரம்) திட்டத்தின்’ கீழ், 26,601.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நகர்ப்புர குடிசைப்பகுதிகளில்

வாழும் 5.85 இலட்சம் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின்' கீழ் 1.97 இலட்சம் குடியிருப்புகளை கட்டுவதற்கான பணிகளை இந்த அரசு 2019–2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளும். 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இதற்கென 2,662.16 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில், ஆற்றங்கரையோரம் வசித்துவரும் ஏழைக் குடும்பங்களுக்கு மிகச் சிறந்த மறுகுடியமர்த்தும் நடைமுறைகளைப் பின்பற்றி, உலக வங்கி உதவியுடன் 4,647.50 கோடி ரூபாய் செலவில், 38,000 குடியிருப்புகளை அமைப்பதற்காக 'நகர்ப்புர ஏழை மக்களுக்கான தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம்' செயல்படுத்தப்படும் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். சென்னை தவிர்த்த இதர நகர்ப்புரப் பகுதிகளில் வீட்டுவசதியினை வழங்குவதற்கும், நகர்ப்புர ஏழைகளுக்குப் பயனளிக்கக்கூடிய வகையில் தொழிலக மற்றும் வாடகை வீட்டுவசதியினை போதுமான அளவில் உருவாக்குவதற்கும், நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வீட்டுவசதித் திட்டத்தை 5,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கும் ஆசிய வளர்ச்சி வங்கியின் கடனுதவி கோரப்பட்டுள்ளது.**

66. சமுதாயத்திற்கு பயன்தரக்கூடிய முதலீடுகளைச் (Social Impact Investments) **செய்யும் உள்நாட்டு மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களைக் கவர்வதற்காக, தமிழ்நாடு உறைவிட நிதியம் உருவாக்கப்பட்டு, இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. வாங்கும் விலையில் தரமான வீட்டுவசதியை ஏழை எளிய மற்றும் நடுத்தரக் குடும்பங்கள் வாங்குவதற்கான உகந்த சூழலை ஏற்படுத்துவதற்காக இந்த நிதியம் பயன்படுத்தப்படும். பணிக்குச் செல்லும் பெண்களுக்குத் தேவையான தரமான, பாதுகாப்பான,**

**குறைந்த விலையிலான விடுதி வசதியை அளிப்பதற்கும், மூத்த குடிமக்களுக்கும், மாற்றுத் திறனுடையோருக்கு உதவியாளருடன் தங்கும் குடியிருப்பு வசதியை ஏற்படுத்தித் தருவதற்கும் இந்த நிதியம் பயன்படுத்தப்படும். இந்த நிதியத்தை உலக வங்கி மதிப்பீடு செய்து, ஆரம்ப முதலீட்டுத் தொகையை வழங்க உள்ளது என்பதையும், இந்த நிதியத்தில் அறிவுசார் பங்குதாரராக தேசிய வீட்டுவசதி வங்கி செயல்படுவதுடன், 500 கோடி ரூபாயை முதலீடு செய்ய உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

67. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக 2,888.20 கோடி ரூபாய் செலவில் 20,789 அலகுகளுக்கான கட்டுமானப் பணிகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. **சொற்பமாக உள்ள நில ஆதாரங்களை முறையாகவும், திறம்படவும் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக, 'மாநில நிலப் பயன்பாட்டுக் கொள்கை' வடிவமைக்கப்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதையும் திட்டமிட்ட வளர்ச்சியின் கீழ் கொண்டு வருவதற்காக, மாநிலத்தை ஒன்பது நிலையான மண்டலங்களாகப் பிரித்து, மண்டலத் திட்டங்களை தயார் செய்வதுடன், மாநிலம் முழுமைக்குமான ஒரு முன்னோக்குத் திட்டத்தையும் இரண்டு ஆண்டுகளுக்குள் நகர் ஊரமைப்பு இயக்ககம் தயார் செய்யும். இதன் முதற்கட்டமாக, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மண்டலங்களுக்கான திட்டங்கள் தீட்டப்படும். இதன் மூலம் மாநில வளர்ச்சிக்கான பல்வேறு முக்கியமான திட்டங்களை முன்னுரிமைப்படுத்துவதற்கும், செயல்படுத்துவதற்கும் வழிவகை செய்யப்பட்டு, மாநிலத்தின் ஒட்டுமொத்த திட்டமிட்ட வளர்ச்சியும் உறுதிசெய்யப்படும்.** அரசு அண்மையில் வெளியிட்ட, பொதுவான வளர்ச்சி விதிமுறைகள் மற்றும் கட்டடங்களுக்கான விதிமுறைகள், ஒழுங்குமுறையான மேம்பாட்டிற்கும், தொழில் நடைமுறையை

எளிதாக்குவதற்கான ஊக்கத்தையும், வாங்கும் திறனுக்கேற்ப வீட்டுவசதியை உருவாக்கி வழங்குவதையும் உறுதி செய்யும்.

**68. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர மேம்பாட்டுத் துறைக்காக 6,265.52 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**வறுமை ஒழிப்பு**

69. வறுமை ஒழிப்பில் கணிசமான அளவு முன்னேற்றத்தைக் கண்டுள்ள இந்த அரசு, வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருகிறது. மக்களைத் திரட்டி ஒருங்கிணைத்தல், திறன் பயிற்சி, வங்கிக் கடன் மூலம் ஊரக குறுந்தொழில்களை உருவாக்குதல் போன்ற பொருளாதார வளர்ச்சிக்கான விரிவான உத்திகளை இத்திட்டங்களில் அரசு கையாண்டு வருகிறது. பல்வேறு நகர்ப்புர மற்றும் ஊரக வறுமை ஒழிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான மைய நிறுவனமாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் உள்ளது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், 31 மாவட்டங்களில் உள்ள 385 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் மற்றும் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியவை மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஒரு அங்கமாகச் செயல்படுத்தப்படுகின்றன. 2019–2020 ஆம் ஆண்டில் இந்த இயக்கத்தைச் செயல்படுத்துவதற்காக 349.46 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராமப்புற இளைஞர்கள் பயனடையும் வகையில், வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி அளிக்க ‘தீனதயாள் உபாத்யாயா கிராமின் கௌசல்யா யோஜனா’ திட்டத்தின் கீழ் 230.89 கோடி ரூபாய் வரும் நிதியாண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புது வாழ்வுத்

திட்டத்தினைத் தொடர்ந்து, உலக வங்கியின் நிதியுதவியுடன் 918.20 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 'தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்' 2018–2019 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 26 மாவட்டங்களில் உள்ள 120 வட்டாரங்களில், 3,994 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமே ஊரகக் குறுந்தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பது ஆகும். 2019–2020 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 172 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 'தீனதயாள் உபாத்யாயா–தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின்' கீழ், நகர்ப்புர வறுமை ஒழிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தேசிய திட்டத்தின் நிதியை, 'தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின்' நிதியுடன் ஒருங்கிணைத்து மாநில அரசு பணிகளை மேற்கொண்டு வருகிறது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 'தீனதயாள் உபாத்யாயா தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்காக' 150 கோடி ரூபாயும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்காக 50 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. **ஒட்டுமொத்தமாக 1,031.53 கோடி ரூபாய் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்காக இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**நெடுஞ்சாலைத் துறை**

70. அரசின் முன்னோடித் திட்டங்களுள் ஒன்றான, 'ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்' (Comprehensive Road Infrastructure Development Programme), சாலைகள், பாலங்கள், சிறுபாலங்கள் மற்றும் சாலைப் பாதுகாப்பு போன்ற பெரிய அளவிலான உட்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2018–2019 ஆம் ஆண்டில் இதற்கான நிதி கணிசமாக உயர்த்தப்பட்டு 4,165.23 கோடி ரூபாய் ஒதுக்கீடு

செய்யப்பட்டது. 2019–2020 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு 4,570.43 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

71. செயல்பாடு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்த முறையின் (Performance Based Maintenance Contract) கீழ், இதுவரை 3,074.84 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,768 கிலோமீட்டர் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, முக்கியமான சாலைகள் முறையாகவும், உயர் தரத்திலும் பராமரிக்கப்படுவது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்த முறை, மாநிலம் முழுவதும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. **2019–2020 ஆம் ஆண்டில், இத்திட்டம் சிவகங்கை கோட்டத்திற்கு விரிவுபடுத்தப்பட்டு 622 கிலோமீட்டர் சாலைப் பணிகள் 715 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். மேலும் செயல்பாடு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்த முறையின் கீழ் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஆசிய வளர்ச்சி வங்கி போன்ற பன்னாட்டு வங்கிகளிடம் நிதியுதவி கோருவதற்கான விரிவானதொரு திட்டத்தை அரசு தயாரித்து வருகிறது.**

72. இந்த அரசின் சிறப்பான முன்முயற்சிகளினால், 7,964 கிலோமீட்டர் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை, பிற மாவட்டச் சாலைகளின் தரத்திற்கு இணையாகத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுத்து வருவதன் மூலம், மாநிலத்தின் ஊரகச் சாலைகளின் தரம் மேம்பட்டுள்ளது. இதுவரையில், இத்திட்டத்தின்படி 2,958 கிலோமீட்டர் சாலைப் பணிகள் 1,490.62 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. **இம்முயற்சியை தொடர்ந்து மேற்கொள்வதற்காக, 2019–2020 ஆம் ஆண்டில் 1,986 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளில் 1,142 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும். 2019–2020 ஆம்**

**ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக 1,050 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**73.** உலக வங்கி கடனுதவியுடன் 'தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்' (Tamil Nadu Road Sector Project) இரண்டாவது கட்ட திட்டப் பணிகள் **5,171** கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 'தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்காக' **459.74** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன், சென்னை–கன்னியாகுமரி தொழில் வழித்தடத் திட்டத்தின் கீழ் **654** கிலோமீட்டர் சாலைப் பணிகள் **6,448.24** கோடி ரூபாய் செலவில் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னை சுற்றுவட்டச் சாலை திட்டத்திற்கு கடனுதவி பெறுவதற்காக ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையுடன் இறுதி கட்டப் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இத்திட்டம், சென்னை நகரத்தினைச் சுற்றியுள்ள சாலைகளின் இணைப்பையும், தரத்தினையும் கணிசமாக மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**74.** இரயில்வே பணிகள் திட்டத்தின் கீழ், **2019–2020** ஆம் ஆண்டில் **256** இரயில்வே மேம்பாலங்களுக்கான கட்டுமானப் பணிகளை, **726.62** கோடி ரூபாய் செலவில் இந்த அரசு மேற்கொள்ளும். நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ், **299.60** கோடி ரூபாய் செலவிலும், புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதி திட்டத்தின் (Revamped Central Road Fund) கீழ் **800** கோடி ரூபாய் செலவிலும் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும். **2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறைக்காக 13,605.19 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**பள்ளிக் கல்வி**

75. அனைவருக்கும் கல்வி, குறிப்பாக ஏழை எளிய மக்களுக்குத் தரமான கல்வியை வழங்குவதில் இந்த அரசு உறுதி கொண்டுள்ளது. பள்ளிக் கல்வியை எளிதாகப் பெறுவதற்காகவும், அதன் தரத்தை மேம்படுத்துவதற்காகவும், 2011 ஆம் ஆண்டு முதல் இந்த அரசு 247 தொடக்கப் பள்ளிகளை புதிதாகத் தொடங்கியுள்ளதுடன், 116 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 1,079 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 604 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தியுள்ளது. மாநிலம் முழுவதும், மாணவர்களின் வசிப்பிடங்களுக்கு அருகிலேயே தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளை நிறுவுவதற்கான இலக்கினை இந்த அரசு முழுமையாக எட்டியுள்ளது.

76. பள்ளிக் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான நலத் திட்டங்களும், முயற்சிகளும் அண்மைக் காலமாக சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருவதன் விளைவாக, கற்றல் திறன் மேம்பட்டுள்ளதுடன், தொடக்கநிலை வகுப்புகளில் நிகர சேர்க்கை விகிதம் 99.8 சதவீதமாக உயர்ந்துள்ளது. 2011–2012 ஆம் ஆண்டில் 63,178 ஆக இருந்த தொடக்கப் பள்ளிக்குச் செல்லாத குழந்தைகளின் எண்ணிக்கை, 2018–2019 ஆண்டில் 33,519 ஆக குறைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டு, கல்வி நிலை அறிக்கையின்படி (ASER), அரசுப் பள்ளி மாணவர்களின் கற்றல் ஒட்டுமொத்தமாக முன்னேறியுள்ளது என்பதுடன், தனியார் பள்ளி மாணவ மாணவியருடன் ஒப்பிடும்போது, அரசுப் பள்ளி மாணவ மாணவியர் கூடுதல் வேகத்தில் முன்னேறி வருகின்றனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

77. புத்தகப் பைகள், காலணிகள், நோட்டுப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், வடிவியல் பெட்டிகள் உட்பட, மாணவர்களுக்கு விலையில்லாமல் வழங்கும் நலத் திட்டங்கள் தொடர்ந்து சிறப்பாகச் செயல்படுத்தப்படும். இதற்காக, 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,656.90 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் இடைநிற்றலைக் குறைப்பதற்கு, பத்து, பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவ மாணவியருக்கும் 5,000 ரூபாயை சிறப்பு ஊக்கத்தொகையாக இந்த அரசு தொடர்ந்து வழங்கும். இதற்காக, வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 313.58 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டில் மடிக்கணினி வழங்கும் திட்டத்திற்காக, வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,362.27 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசுப் பள்ளிகளுக்குப் போதுமான உட்கட்டமைப்பை வழங்குவதற்காக, நபார்டு வங்கியின் கடனுதவியுடன், 381.31 கோடி ரூபாய் செலவில் வகுப்பறைகள் கட்டுதல், ஆய்வகங்கள், கழிப்பறைகள் மற்றும் பிற வசதிகளை ஏற்படுத்துவதற்கான பணிகளை அரசு மேற்கொள்ளும்.

78. ‘அனைவருக்கும் கல்வி இயக்கம்’ (Sarva Shiksha Abhiyan) மற்றும் ‘அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்கம்’ (Rashtriya Madhyamik Shiksha Abhiyan) ஆகியவற்றின் கீழ் நிலுவையாக உள்ள, முறையே 2,109.08 கோடி ரூபாய் மற்றும் 1,092.22 கோடி ரூபாயை மத்திய அரசு இதுவரை விடுவிக்கவில்லை. இருந்தபோதிலும், மாநிலத்தில் பள்ளி செல்லும் குழந்தைகளின் நலனைக் கருதி, இத்திட்டங்களை அரசு முனைப்புடன் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. மத்திய அரசின் திட்டங்களான ‘அனைவருக்கும் கல்வி இயக்கம்’ மற்றும் ‘அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்கம்’

ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு, **2019–2020** ஆம் ஆண்டு முதல் ‘ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டம்’ (Samagra Shiksha Abhiyan) என்ற புதிய திட்டம் உருவாக்கப்பட்டு, அதைச் செயல்படுத்த **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **2,791.32** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

79. வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் தனியார் பள்ளிகளில் பயில்வதற்கு வழிவகை செய்யும் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தினை, இந்த அரசு முழுஉத்வேகத்துடன் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் இன்று வரை, **4.19** இலட்சம் குழந்தைகள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்காக, **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **248.76** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

80. **2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பள்ளிக் கல்வித் துறைக்காக 28,757.62 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**உயர்கல்வி**

81. சமுதாயத்தில் அனைத்துப் பிரிவினரும் குறைந்த செலவில், தரமான உயர்கல்வி பெறுவதை உறுதிசெய்வதற்கான முக்கியத்துவத்தை இந்த அரசு தொடர்ந்து அளித்து வருகிறது. மூன்று பல்வகை தொழில்நுட்பக் கல்லூரிகளை **2018–2019** ஆம் கல்வி ஆண்டில் அரசு நிறுவியுள்ளதுடன், **29** சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்கவும் அனுமதி வழங்கியுள்ளது. **2019–2020 ஆம் ஆண்டில், இராமேஸ்வரத்தில் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின்**

**பெயரில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

82. முதல் தலைமுறை பட்டதாரி மாணவ, மாணவியருக்கு கல்விக் கட்டணத்தைத் திரும்ப வழங்கும் திட்டத்திற்காக 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 460.25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சர்வதேசத் தரத்திற்கு கல்வி நிறுவனங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளுள் ஒன்றாக, தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவும் சட்டங்களை அரசு இயற்றி சிவசுப்ரமணிய நாடார் பல்கலைக்கழகம், சாய் பல்கலைக்கழகம் ஆகிய இரண்டு தனியார் பல்கலைக்கழகங்களை அரசு அனுமதித்துள்ளது. அரசுக் கல்லூரிகளில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து மேம்படுத்தப்படுவதுடன், 10 மாநிலப் பல்கலைக்கழகங்கள் மற்றும் 65 அரசுக் கல்லூரிகளில், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, இதுவரை 269.36 கோடி ரூபாய், தேசிய உயர் கல்வித் திட்டத்தின் (RUSA 1.0) கீழ் செலவிடப்படுள்ளது. இதேபோன்ற முயற்சிகளை தேசிய உயர்கல்வி இரண்டாம் திட்டத்தின் (RUSA 2.0) கீழ் மேற்கொள்வதற்காக 382 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

83. பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்பட்டு வரும் தொகுப்பு நல்கைத் தொகைகளில் 20 வருடங்களுக்குப் பின்னர் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அண்ணாமலை பல்கலைக்கழகத்திற்கு 250 கோடி ரூபாய் உட்பட, பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கு 538.10 கோடி ரூபாய் தொகுப்பு நல்கைத் தொகையாக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **உயர் தொழில்நுட்பத் திறன்களும் சிறப்புத் தகுதிகளும் கொண்ட பணியாளர்களுக்கான தேவை உலக அளவில் வளர்ந்து வருவதைக்**

**கருத்தில் கொண்டு, தொழிற் கல்லூரிகளில் உள்ள வசதிகளை சர்வதேசத் தரத்திற்கு தொடர்ந்து மேம்படுத்துவது அவசியமாகிறது. எனவே, மாநிலத்தின் முதன்மையான பல்கலைக்கழகமான அண்ணா பல்கலைக்கழகத்திலும், தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கட்டுப்பாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளிலும் சர்வதேசத் தரத்தில் கற்பித்தலுக்குத் தேவைப்படும் உபகரணங்கள் உள்ளிட்ட அதன் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, அண்ணா பல்கலைக்கழகத்திற்கு 100 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.** 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் உயர்கல்வித் துறைக்காக 4,584.21 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு**

84. வளர்ந்த நாடுகள் அடைந்துள்ள சுகாதாரத் தர நிலையை, 2023–ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டும் என்பதே தமிழ்நாடு அரசின் தொலைநோக்குப் பார்வையாகும். தமிழ்நாட்டில் கடந்த எட்டு ஆண்டுகளில் பல்வேறு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டதால், மகப்பேறு இறப்பு விகிதம், பச்சிளம் குழந்தை இறப்பு விகிதம் மற்றும் இதர சுகாதாரக் குறியீடுகள் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளன. மகப்பேறு இறப்பு விகிதத்தில் 2030–க்குள் அடைய வேண்டிய நிலையான வளர்ச்சி இலக்கினை முன்னதாகவே அடைந்ததற்காக மத்திய அரசின் விருதினை தமிழ்நாடு பெற்றுள்ளது. மொத்தக் கருவுறு விகிதம் (Total Fertility Rate) 1.6 ஆக தமிழ்நாட்டில் உள்ளது. இது நாட்டிலேயே குறைவான அளவாகும்.

85. தமிழ்நாட்டு மக்கள், குறிப்பாக ஏழை எளிய மக்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில், உயர்தர மருத்துவ சிகிச்சை

பெறுவதை உறுதி செய்ய 'முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை' தமிழ்நாடு அரசு 2012 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்ட 2011–2012 ஆம் ஆண்டு முதல், இதுவரை 28.34 இலட்சம் நபர்கள், 5,527 கோடி ரூபாய் அளவிலான மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுள்ளனர். இத்திட்டத்தை மத்திய அரசின் முன்னோடித் திட்டமான 'பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா' திட்டத்துடன் ஒருங்கிணைத்து, ஆண்டு ஒன்றிற்கு ஒரு குடும்பத்திற்கான காப்பீட்டுத் தொகை 2 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 1 ஆம் தேதி முதல் உயர்த்தப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்கான காப்பீட்டுக் கட்டணத் தொகைக்காக 1,363 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

86. அரசின் மற்றுமொரு முன்னோடித் திட்டமான 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்' கீழ் கர்ப்பிணிப் பெண்களுக்கு 18,000 ரூபாய் நிதியுதவியாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 14,000 ரூபாய் ரொக்கமாக வழங்கப்படுவதுடன், 4,000 ரூபாய் செலவில் இரும்புச்சத்து மருந்து மற்றும் ஊட்டச்சத்துப் பொருட்கள் அடங்கிய இரண்டு அம்மா தாய்சேய் நல ஊட்டச்சத்து பெட்டகங்களும் வழங்கப்படுகின்றன. தகுதி வாய்ந்த அனைத்து கர்ப்பிணிப் பெண்களின் முதல் பிரசவத்திற்கு மட்டும் நிதியுதவி வழங்க வகை செய்யும் மத்திய அரசின் 'பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா திட்டத்துடன்' மாநில அரசின் இத்திட்டம் இணைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக, 2018–2019 ஆம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து 111.24 கோடி ரூபாய் பெறப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில்

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்திற்காக 959.21 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம், அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டங்கள், சானிட்டரி நாப்கின்கள் வழங்குவதற்கான மகளிர் சுகாதாரத் திட்டம் போன்றவற்றை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தும்.

87. ‘பிரதான் மந்திரி ஸ்வஸ்திய சுரக்ஷா யோஜனா’ திட்டத்தின் கீழ், மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தலா 150 கோடி ரூபாய் செலவில், விபத்து காய சிகிச்சைப் பிரிவுடன் கூடிய உயர்சிறப்பு மருத்துவமனைகள் உருவாக்கப்பட்டு, அண்மையில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. அதேபோல், மதுரையில், 750 படுக்கைகளுடன் கூடிய எய்ம்ஸ் மருத்துவமனை, மருத்துவ மற்றும் செவிலியர் கல்லூரியை 1,264 கோடி ரூபாய் செலவில் அமைக்க அடிக்கல் நாட்டியுள்ள மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு நாங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

88. மாநிலத்தில் உள்ள இடைநிலை மற்றும் உயர்நிலை அரசு மருத்துவமனைகளின் மேம்பாட்டிற்காக ‘தமிழ்நாடு நகர்ப்புர சுகாதாரத் திட்டத்தை’ 1,634 கோடி ரூபாய் செலவில், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் கடனுதவியுடன், தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்காக 242.92 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

89. **அரசு மருத்துவமனைகள் மூலம் கிடைக்கும் மருத்துவ வசதிகள் ஏழை எளிய மற்றும் நலிவடைந்த பிரிவினருக்கு எளிதில் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்வதற்காக, உலக வங்கி**

**கடனுதவியுடன் 2,685.91 கோடி ரூபாய் செலவில் 'தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டம்' விரைவில் செயல்படுத்தப்படும்.**

90. அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் அத்தியாவசிய மருந்துகள் தேவையான அளவு இருப்பு வைப்பதில், நாட்டிலேயே தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. அதேபோல், **அனைத்து நிலை மருத்துவமனைகளிலும் முக்கிய உடற் பரிசோதனைகள் தொகுப்பாகக் கிடைப்பதை உறுதிசெய்யக்கூடிய முக்கியமான இலட்சியத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும். இத்திட்டத்திற்குத் தேவையான உபகரணங்கள், கருவிகள் மற்றும் பொருட்கள் வழங்கப்படுவதுடன், இத்திட்டத்திற்கான சிகிச்சை நெறிமுறைகளும் உருவாக்கப்படும். இத்திட்டத்திற்கென மூன்று ஆண்டுகளில் 247 கோடி ரூபாய் செலவிடப்படும்.**

91. **2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறைக்காக 12,563.83 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**போக்குவரத்து**

92. திறமையான பொது போக்குவரத்து அமைப்பு, குறைந்த செலவில் போக்குவரத்து வசதியை பொதுமக்கள் பெறுவதற்கு அவசியமாகிறது. தூய்மையான எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவதற்கான அரசின் முன்னோடிக் கொள்கையின் ஒரு பகுதியாக, சி40 நகரங்கள் பருவநிலை தலைமைக் குழுவுடன் (C 40 Cities Climate Leadership Group) 'தூய்மையான பேருந்துக்கான அறிவிப்பில்' (Clean Bus Declaration) இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு அரசு கையெழுத்திட்டுள்ளது. மாசற்ற

மின்சாரப் பேருந்துகளையும், மாசினை குறைந்த அளவு வெளிப்படுத்தும் பேருந்துகளையும் போக்குவரத்துத் துறையில் அறிமுகப்படுத்த இந்த உடன்பாடு வழிவகுக்கும். **ஜெர்மன் வளர்ச்சி வங்கியின் (KfW) கடனுதவியுடன், 5,890 கோடி ரூபாய் செலவில் 12,000 புதிய BS-VI தரத்திலான பேருந்துகளையும், 2,000 மின்சாரப் பேருந்துகளையும் வாங்கிப் பயன்படுத்தும் வகையில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் முதல் கட்டத்தில் 500 மின்சாரப் பேருந்துகளை சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களிலும் 2,000 BS-VI பேருந்துகளை மாநிலம் முழுவதும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.**

93. அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு நெருக்கடி காலங்களில் மாநில அரசு உதவிக் கரம் நீட்டி வருகிறது. 2018–2019 ஆம் ஆண்டில், ஓய்வு பெற்ற பணியாளரின் ஓய்வுக்கால பலன்கள், பணியாளர்களின் ஓய்வூதிய நிலுவைகள் ஆகியவற்றிற்கு குறுகியகாலக் கடனாக 376.02 கோடி ரூபாயும், வழிவகை முன்பணமாக 1,322.06 கோடி ரூபாய் உட்பட மொத்தமாக 1,698.08 கோடி ரூபாயை நிதியுதவியாக அரசு வழங்கியுள்ளது. 2018–2019 ஆம் ஆண்டில் டீசல் விலை உயர்வின் காரணமாக ஏற்படும் நிதியிழப்பை ஈடுசெய்ய, போக்குவரத்துக் கழகங்களுக்கு கூடுதலாக 333.07 கோடி ரூபாய் ‘டீசல் விலை இழப்பீடாக’ இதுவரை வழங்கப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாணவ, மாணவியருக்கான போக்குவரத்து பயணக் கட்டணச் சலுகைக்காக 766 கோடி ரூபாய் மற்றும் டீசல் மானியத்திற்காக 250 கோடி ரூபாய் உட்பட, போக்குவரத்துத் துறைக்காக 1,297.83 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**எரிசக்தி**

94. 2011–ஆம் ஆண்டு முதல், மாநில மற்றும் மத்திய தொகுப்பு மின் திட்டங்கள், மின் கொள்முதல் மற்றும் புதுப்பிக்கத்தக்க மின்சக்தி ஆகியவற்றின் மூலம் 13,619 மெகாவாட் மின்சாரத் திறன் மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு, மாநிலத்தின் தற்போதைய ஒட்டு மொத்த மின்திறன் 30,191 மெகாவாட் ஆக உள்ளது. அதிகரித்து வரும் மின் தேவைக்கேற்ப 13,000 மெகாவாட் அளவிற்கு மாநிலத்தின் அனல்மின் திட்டங்களை 91,880 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதைத்தவிர, 2,500 மெகாவாட் அளவிற்கான புனல்மின் திட்டங்கள் 8,831.29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன.

95. மின்உற்பத்தி நிலையங்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை வெளிக்கொணர்ந்து மின்விநியோக மையங்களுக்கு (load centres) விநியோகிக்கும் சங்கிலித் தொடரில் மின்தொடரமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. 2011 ஆம் ஆண்டு முதல் 464 புதிய துணை மின் நிலையங்கள் மற்றும் 12,636 சுற்று கிலோமீட்டர் நீளமுள்ள மிக உயர் மின்னழுத்தப் பாதைகள் இயக்கி வைக்கப்பட்டுள்ளன. ஊரக மற்றும் நகரங்களின் மின்பகிர்மான உள்கட்டமைப்பை மேம்படுத்த ‘தீனதயாள் உபாத்யாயா கிராம ஜோதி யோஜனா’ மற்றும் ‘ஒருங்கிணைக்கப்பட்ட மின் மேம்பாட்டுத் திட்டங்களின்’ மூலமாக, ஒருமித்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

96. **பசுமை எரிசக்தியை மேம்படுத்தும் நோக்கத்தில், தேனி, சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் 1,125 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 250 மெகாவாட் திறன் கொண்ட மிதக்கும் சூரியசக்தி (Floating Solar)**

**மின் திட்டங்களும், 2,350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 500 மெகாவாட் திறன் கொண்ட கடலாடி மிக உய்ய சூரிய மின்னழுத்தப் பூங்கா திட்டமும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மூலம் செயல்படுத்தப்படும். சாகுபடிக்கு பயன்படாத சமுதாய மற்றும் பட்டா நிலங்களில், புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில், பசுமைச் சூழல் நிதியத்தின் கீழ் உள்ள நிதியிலிருந்து, 5 மெகாவாட் திறன் கொண்ட சிறிய அளவிலான ஊரக புதுப்பிக்கத்தக்க மின் பூங்காவுடன், 'அம்மா பசுமை கிராமம்' என்ற நிலையான மின் கிராமங்களை, தமிழ்நாடு மின் மேம்பாட்டு முகமை (Tamil Nadu Energy Development Agency) ஏற்படுத்தும். அண்மையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட 2019 தமிழ்நாடு சூரியஒளி மின்சக்தி கொள்கை, மாநிலத்தின் சூரியஒளி மின்சக்தி உற்பத்தித் திறனை, 2023 ஆம் ஆண்டுக்குள் 9,000 மெகாவாட் அளவிற்கு உயர்த்த வழிவகை செய்யும்.**

97. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் 22,815 கோடி ரூபாய் கடனை மாநில அரசு 'உதய்' திட்டத்தின் கீழ் ஏற்றுக் கொண்டது. இதன் விளைவாக, ஆண்டிற்கு வட்டிச் செலவினம் 1,779.42 கோடி ரூபாய் அளவிற்கு அரசுக்கு அதிகரித்துள்ளது. இந்தக் கடன் தொகை ஐந்து ஆண்டுகளில் அரசு மானியமாக மாற்றப்பட வேண்டும். இதுவரை, 9,126 கோடி ரூபாய் உதய் திட்டக் கடனை மானியமாக மாற்றியுள்ளதுடன், 2019–2020 ஆம் ஆண்டில் 4,563 கோடி ரூபாய் கடனையும் இந்த அரசு மானியமாக மாற்றும். விவசாயம் மற்றும் இதர நுகர்வோர்கள் உட்பட பல்வேறு வகையான நுகர்வோருக்கு வழங்கப்படும் மின் மானியம் தொடர்ந்து வழங்கப்படும். இதற்காக 8,118.25 கோடி ரூபாய் இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **2019–2020 ஆம்**

**ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் எரிசக்தித் துறைக்கு 18,560.77 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**சென்னை மெட்ரோ இரயில்**

98. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதற்கட்டத்தில் 45.01 கிலோமீட்டர் நீளமுள்ள இரண்டு வழித்தடங்கள் 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் மக்கள் பயன்பாட்டிற்கு முழுமையாக வரவுள்ளன. திருவொற்றியூர் மற்றும் விம்கோ நகர் வரையிலான ஒன்பது கிலோமீட்டர் நீளமுள்ள முதற்கட்டத்தின் நீட்டிப்புப் பணிகள் நிறைவுற்று, 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்கு வரும். 2018–2019 ஆம் ஆண்டில் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்காக 1,950 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. **ஏற்கெனவே அறிவித்தபடி, மீனம்பாக்கம் விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம் மெட்ரோ பேருந்துப் பணிமனை வரை மெட்ரோ இரயில் திட்ட வழித்தடம் நீட்டிப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.**

**99. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ், 118.90 கிலோமீட்டர் நீளமுள்ள மூன்று மெட்ரோ இரயில் வழித்தடங்களில் மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலும், மாதவரம் முதல் சென்னை கோயம்பேடு பேருந்து நிலையம் வரையிலுமான 52.01 கிலோமீட்டர் நீளமுள்ள வழித்தடங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை 20,196 கோடி ரூபாய் நிதியுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கு மாநில அரசும் 40,941 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் இத்திட்டப்பணிகளை மேற்கொள்ள நிருவாக அனுமதி அளித்துள்ளது. இத்திட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. மற்ற வழித்தடங்களுக்கான நிதி ஆதாரங்களைத் திரட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.**

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தினைச் செயல்படுத்துவதன் மூலம் சென்னைப் பெருநகரப் பகுதிகளில் மெட்ரோ இரயிலின் சேவைப்பகுதி 172.91 கிலோமீட்டராக அதிகரித்து, பொதுப் போக்குவரத்தில் மெட்ரோ இரயிலின் பங்கு கணிசமாக அதிகரிக்கும். **2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மெட்ரோ இரயில் திட்டத்திற்கான பங்கு மூலதனம் மற்றும் கடனாக மொத்தம் 2,681 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**தொழிலாளர் நலன்**

100. தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியம் உட்பட, 17 அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான நல வாரியங்கள் உள்ளன. கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 21,071 புலம் பெயர்ந்த உறுப்பினர்கள் உட்பட, மாநிலத்தில் இதுவரை 72.29 இலட்சம் தொழிலாளர்கள் பல்வேறு அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான நல வாரியங்களில் பதிவு செய்துள்ளனர். பல்வேறு பகுதிகளில் 31.66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழிலாளர்கள் தங்கும் அறைகள் கட்டுவதற்கான பணிகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. **மத்திய அரசு தற்போது அறிவித்துள்ள ஓய்வூதியத் திட்டத்தின் பயனை அமைப்புசாரா தொழிலாளர் பெறும் வகையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.** அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான நலவாரியங்களுக்கு மானியம் வழங்க இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 148.83 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்பு மற்றும் திறன் பயிற்சி**

101. அண்மைக் காலங்களில், நாட்டின் மக்கள் தொகையில் இளைஞர்களின் எண்ணிக்கை உயர்ந்து மாபெரும் மாற்றங்கள் நிகழ்ந்து வரும் நிலையில், இளைஞர்களின் வேலை வாய்ப்பை அதிகரிப்பதற்கான

திறன் மேம்பாட்டில், இந்த அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. தொழில் நெறி வழிகாட்டும் மையங்களாக தற்போது வேலைவாய்ப்பு மையங்கள் மாற்றமடைந்துள்ளன. போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தவும், இணையவழி சுய மதிப்பீடு செய்து கொள்ளவும், வேலை வழங்கும் நிறுவனங்களையும், வேலை தேடுபவர்களையும், அவர்களது தேவைகளை நிறைவு செய்வதற்கான இணைப்புத் தளமாகவும், மாநில அளவில் முதன்மையானதொரு தளமாக, காணொளிக் காட்சி வசதிகளுடன் கூடிய 'மாநில தொழில் நெறி வழிகாட்டும் மையம்' சென்னையில் அமைக்கப்பட்டு வருகிறது.

102. தொழிற்பயிற்சி நிறுவனங்கள், வேலைவாய்ப்பு சார்ந்த கல்வியை வழங்கும் தளங்களாகும். தொழிற்பயிற்சி மாணவர்களுக்கான வேலைவாய்ப்பை மேம்படுத்தும் வகையில் பயிற்சி வழங்குவதில், அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பில் உள்ள இடைவெளியை நிரப்புவதற்காக தற்கால தொழில்நுட்பத்திற்கேற்ற இயந்திரங்களையும், சாதனங்களையும் 30 கோடி ரூபாய் செலவில் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. **மருத்துவ மின்னணுவியல், கட்டட வடிவமைப்பு, வாகனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் வண்ணம் தீட்டுதல், நவீன இயந்திரங்கள் இயக்குதல், தொழில்நுட்ப மின்னணுவியல், தீயணைப்புத் தொழில்நுட்பம் மற்றும் தொழில்துறை பாதுகாப்பு மேலாண்மை போன்ற, நவீன உயர்நிலை தொழிற்பிரிவுகளுக்கான பயிற்சி ஆகியவை 20 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களில் 38 கோடி ரூபாய் செலவில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.**

103. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை வேலைவாய்ப்பைப் பெறக்கூடியவர்களாக மாற்றும் திறன் பயிற்சியை அளிப்பதற்காக, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் உருவாக்கப்பட்டது. 2018–2019 ஆம் ஆண்டில் திறன் பயிற்சி அளிப்பதற்காக 200 கோடி ரூபாய்

வழங்கப்பட்டுள்ளது. 'பிரதம மந்திரி திறன் வளர்ப்புத் திட்டம்' போன்ற, மத்திய அரசு நிதி வழங்கும் திட்டங்களில் பெறப்படும் நிதியையும் ஒருங்கிணைத்து, 2018–2019 ஆம் ஆண்டில் நாளது தேதி வரை, 82,064 இளைஞர்கள் திறன் பயிற்சியைப் பெற்றுள்ளனர். முன் கற்றல் அங்கீகாரம் வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 20,295 நபர்களுக்கு சான்று வழங்கப்பட்டுள்ளது. **ஒரு சிறப்பான முன்முயற்சியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து மாவட்டத் தலைமையிடங்களில், வேலைவாய்ப்பற்ற பொறியியல் பட்டதாரிகளுக்கு உயர்நிலை தொழில்நுட்பத் திறன் பயிற்சியை அளிப்பதற்கான பயிற்சி மையங்கள் அரசு–தனியார் பங்களிப்பு முயற்சியில் இந்த அரசால் வரும் நிதியாண்டில் ஏற்படுத்தப்படும். இதன் மூலம், வளர்ந்து வரும் தொழில்நுட்பப் பிரிவுகளில் உள்ள சிறப்பு தகுதித் திறன் தேவைப்படும் பணியிடங்களில், ஆண்டுதோறும் 10,000 வேலையில்லா பொறியியல் பட்டதாரிகள் பயிற்சி பெற்று வேலைவாய்ப்பைப் பெறுவார்கள்.**

104. **2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பிரதம மந்திரி திறன் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 51.64 கோடி ரூபாயும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கு வழங்க 200 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.**

**கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை**

105. முதன்மை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோஆப்டெக்ஸ் நிறுவனம் ஆகியவற்றின் கைத்தறிப் பொருட்களின் விற்பனையை அரசு மானியம் வழங்கி ஊக்குவிப்பதன் மூலம், கைத்தறி நெசவாளர்கள் உறுதியான தொடர்ச்சியான, வேலைவாய்ப்பு பெறுகின்றனர். 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட கைத்தறி உதவித் திட்டத்தை 2019–2020 ஆம் ஆண்டில் செயல்படுத்துவதற்காக 40 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏழைக் குடும்பங்களுக்கு 'விலையில்லா சேலைகள் வேட்டிகள் வழங்கும் திட்டத்தை' தொடர்ந்து செயல்படுத்துவதற்காக, 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 490.20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கைவினைப் பொருட்கள் விற்பனையை ஊக்குவிப்பதற்காக, நாட்டிலேயே முதன்முறையாக, வாடிக்கையாளர்கள் இணையவழியாகக் கொள்முதல் செய்யும் வகையில், 'மெய்நிகர் தோற்ற (Virtual Reality) விற்பனை நிலையத்தை' தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் மேம்பாட்டுக் கழகம் உருவாக்கி வருகிறது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கு 1,170.56 கோடி ரூபாயும், கைவினை மற்றும் கதர்த் துறைக்கு 211.11 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**தகவல் தொழில் நுட்பவியல்**

**106.** தமிழ்நாட்டின் மொத்த மென்பொருள் ஏற்றுமதி 2017–2018ஆம் ஆண்டில் 1,11,179 கோடி ரூபாய் ஆகும். இதில், சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் (SEZ) பங்கு 74,637 கோடி ரூபாயாகவும், எல்காட் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் (ELCOSEZ) பங்கு 15,957 கோடி ரூபாயாகவும் உள்ளது. மேலும், 6.39 இலட்சம் நபர்களுக்கான மொத்த நேரடி வேலைவாய்ப்புகளில், தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (ELCOSEZ) மூலமான வேலைவாய்ப்புகள் 76,875 ஆகும். சென்னை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களான கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி, ஒசூர் மற்றும் மதுரையில் இரண்டு இடங்கள் உட்பட, எட்டு தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல்

தொழில்நுட்பவியல் சார்ந்த சிறப்பு பொருளாதார மண்டலங்களை 1,321.61 ஏக்கர் பரப்பளவில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது. இதுவரை, தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் உள்ள மொத்த நிலப்பரப்பில், சுமார் 71 சதவீதம் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பகுதிகளிலும் தொழில்நுட்ப நிறுவனங்களை ஏற்படுத்த அரசு தீவிரமாக நடவடிக்கை எடுக்கும்.

107. அண்மையில் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் கொள்கை 2018, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. தமிழ்நாடு மின்னணு வன்பொருள் உற்பத்திக் கொள்கையும் விரைவில் வெளியிடப்படும். இவை, மின்னணு வன்பொருள் உற்பத்தியில் நாட்டிலேயே தமிழ்நாடு முதன்மையான இடத்தைப் பெற வழிவகுக்கும். தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் இரண்டாம் கட்டப் பணிகளை நீட்டிக்கவும், அதனை தமிழ்நெட் திட்டத்துடன் ஒருங்கிணைத்திடவும் 443.64 கோடி ரூபாய்க்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. தேவையான உட்கட்டமைப்பு மற்றும் சோதனைக் கருவிகளைக் கொண்ட சர்வர் பண்ணை (server farm) மாநிலத் தரவு மையத்தில் நிறுவப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் மேகக் கணினியம் (cloud computing) நிறுவப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது. பேரிடர் தரவு மீட்பு மையம் 59.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ளது. **செயற்கை நுண்ணறிவு, இயந்திரக் கற்றல், தொகுப்புத் தொடர், மிகைத் தரவு, ட்ரோன்கள் மற்றும் பொருட்களின் இணையம் போன்ற தொழில்நுட்பங்கள் மக்களுக்கு சிறப்பாக சேவையாற்றும் வகையில் பயன்படுத்தப்படும். இதற்கென, தமிழ்நாடு மின்–ஆளுமை முகமையின் கீழ் 'வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கான உயர் மையம்' ஏற்படுத்தப்படும்.**

தமிழ்நாடு பைபர்நெட் கார்ப்பரேஷன் மூலம் பாரத்நெட் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்து வருகிறது. இதன் மூலம், அனைத்து ஊராட்சிகளுக்கும் கண்ணாடி இழை மூலம் தகவல் தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இந்த வசதி தமிழ்நெட் திட்டத்தின் மூலம் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் விரிவுபடுத்தப்படும். இந்த வரவு–செலவுத் திட்டத்தில் தகவல் தொழில்நுட்பத் துறைக்கு 140.62 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழில்துறை**

108. முதலீட்டிற்கான முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளது என்பதை, 2019 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் மாநாடு பறைசாற்றியுள்ளது. இரண்டு நாட்கள் நடைபெற்ற இம்மாநாட்டில், மூன்று இலட்சம் கோடி ரூபாய்க்கான முதலீடுகளை ஈர்ப்பதற்கான 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதலீட்டாளர்களுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டங்களால், 10.45 இலட்சம் நபர்கள் வேலைவாய்ப்பு பெறுவார்கள். இம்மாநாட்டின்போது, உற்பத்தி, தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள், சில்லறை விற்பனை பூங்கா, வீட்டுவசதி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, உணவு பதப்படுத்துதல் மற்றும் கல்வி உட்பட பல்வேறு துறைகளில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் மாநாடு மூலம் சிறுகுறு நடுத்தர தொழில்களுக்கு 32,206 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு பெறப்பட்டுள்ளது. தென் மாவட்டங்கள் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் போன்ற தொழில்ரீதியாக பின்தங்கிய மாவட்டங்களில் முதலீடுகள் செய்வதற்கும் இந்த மாநாடு வழிவகுத்துள்ளது. மாநிலத்தின் மேற்கு மண்டலத்தில், குறிப்பாக துணி, ஆயத்த ஆடைகள் மற்றும் பொறியியல் துறைகளில் இந்த மாநாட்டின் மூலம் கூடுதல் முதலீடுகளை நாம் ஈர்த்துள்ளோம்.

இம்மாநாட்டில் நிறைவேற்ற உறுதி செய்துள்ள திட்டங்களின் செயல்பாட்டை உன்னிப்பாகக் கவனித்து, ஒற்றைச் சாளர முறை அமைப்பின் மூலம் இத்திட்டங்களை விரைவாகச் செயல்படுத்த தேவையான உதவிகளைஅரசு வழங்கும்.

109. **மாண்புமிகு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களால், சென்னை, ஒசூர், சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சியில் 3,123 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மத்திய பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் மூலம் பாதுகாப்புத் தளவாடங்கள் தயாரிக்கும் தமிழ்நாடு பாதுகாப்பு உபகரணங்கள் உற்பத்தி முனையங்கள் சமீபத்தில் தொடங்கி வைக்கப்பட்டன. இத்திட்டத்திற்கு கூடுதல் ஊக்கம் அளிக்கும் வகையில், 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை வெளியிடப்பட்டுள்ளது. இக்கொள்கையின் கீழ், வானூர்தி மற்றும் இராணுவத் தளவாடங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை மாநிலத்தில் அமைப்பவர்களுக்கு உரிய ஊக்கம் அளிக்கப்படும்.**

110. **2018–2019 ஆம் ஆண்டில் முதலீட்டு மானியமாக அரசு 2,000 கோடி ரூபாய் வழங்கியுள்ளதுடன், 2019–2020 ஆம் ஆண்டிற்கு 2,500 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தொழில் துறைக்கு 2,747.96 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள்**

111. தமிழ்நாட்டில் 19.50 இலட்சம் பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுடன் தமிழ்நாடு, இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களில் 1.23 கோடிக்கும் அதிகமான நபர்களுக்கு

வேலை வாய்ப்பை அளிக்கக்கூடிய வகையில், 2.12 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 2018–2019 ஆம் ஆண்டில், 9.50 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கக்கூடிய வகையில், 18,174 கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கான உத்யோக் ஆதார் ஒப்பந்தங்களை 1.70 இலட்சம் தொழில் முனைவோர்கள் பதிவு செய்துள்ளனர். தொழில் முனைவோர்கள் தொழில் நிறுவனங்களை தமிழகத்தில் தொடங்குவதற்கு சாதகமான சூழலை புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் மேம்பாட்டுத் திட்டம் ஏற்படுத்தியுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்காக 87.92 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

112. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயனடையும் வகையில், தொழிற்பேட்டைகளை தமிழ்நாடு சிறு தொழில்கள் மேம்பாட்டுக் கழகம் உருவாக்கியுள்ளது. பல்வேறு பகுதிகளில் 4,490.74 ஏக்கர் நிலங்களை நில வங்கித் திட்டத்தின் கீழ் அந்நிறுவனம் கண்டறிந்துள்ளது. **புதிய தொழில் நிறுவனங்களுக்கான நிலத் தேவைகள் அதிகரித்திருப்பதைக் கருத்தில் கொண்டு, திருமுடிவாக்கம் மற்றும் ஆலத்தூர் தொழிற்பேட்டைகள் மேலும் விரிவுபடுத்தப்படும். வேளாண் மின்பாதை மூலம் மின் விநியோகம் பெறும் தமிழ்நாடு சிறுதொழில்கள் மேம்பாட்டுக் கழகத்தால் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் தொழிற்பேட்டைகளில் இயங்கி வரும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தடையற்ற தரமான மின்சாரத்தைப் பெறுவதற்காக, 2019–2020 ஆம் ஆண்டில் தனியாக தொழில் மின்பாதை அமைக்கப்பட்டு, இத்தொழிற்பேட்டைகளுக்கு சீராக மின் விநியோகம் வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.**

113. குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ், குழும வளர்ச்சி அணுகுமுறையில் குறு, சிறு தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் பொது வசதி மையங்களை ஏற்படுத்துவதன் மூலம் அவற்றின் உற்பத்தி மற்றும் போட்டித் திறன் அதிகரிக்கப்படுகிறது. இதுவரை, 121.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 22 பொதுவசதி மையங்களை ஏற்படுத்தும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 2019–2020 ஆம் ஆண்டில் இது போன்ற 25 திட்டங்கள் கூடுதலாக நிறைவேற்றப்படும்.

114. **தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் வெளிநாட்டு முதலீட்டினை ஊக்குவிக்கவும், அந்நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகள் சர்வதேச சந்தைகளுக்கு சென்றடைவதற்கும் உதவக்கூடிய, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான வர்த்தக மற்றும் முதலீட்டு மேம்பாட்டு மையம் (MSME Trade and Investment Promotion Bureau) என்ற ஒரு புதிய அமைப்பை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தும்.** 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறைக்காக 476.26 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுற்றுலா, கலை மற்றும் பண்பாடு**

115. அயல்நாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில், தமிழ்நாடு தேசிய அளவில் முன்னணியில் உள்ளது. எண்ணற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், கட்டடக் கலைச் சின்னங்கள், தொன்மை வாய்ந்த திருக்கோவில்கள், கடற்கரைப் பகுதிகள் மற்றும் இயற்கை எழில் நிறைந்த மலைவாழிடங்களைக் கொண்ட நமது மாநிலத்திற்கு சுற்றுலாவை ஊக்குவிக்க சிறந்த வாய்ப்புகள் உள்ளன. ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன், சுற்றுலாத் தலம் மற்றும்

சுற்றுலாச் சுற்று அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டத்தின் நான்காவது கட்டத்திற்கு 288 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 'பிரசாத்', 'சுதேசி தர்ஷன்' திட்டங்களையும் மாநில அரசு நிதியில் சுற்றுலா உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டங்களையும் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது.

116. **சுற்றுலாத் துறையில் மாநிலத்திற்கு உள்ள வாய்ப்புகளை முழுவதுமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டு, மேற்கத்திய நாடுகள், ஆசிய நாடுகள் மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை மேலும் ஈர்க்கும் தரமான சுற்றுலா சுற்றுகளைக் கண்டறிந்து அந்தச் சுற்றுக்களில் இடம் பெற்றுள்ள மையங்களில் அடிப்படை வசதிகளையும், உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்தி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கு மகத்தானதொரு திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும். அத்தகைய சிறந்த சுற்றுலாத் தலங்களுக்கு அவசியமான சுற்றுலா சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளான, உணவகங்கள், விடுதிகள் மற்றும் போக்குவரத்து போன்றவை அரசு தனியார் பங்களிப்பு முறையில் சர்வதேசத் தரத்திற்கு மேம்படுத்தப்படும். இதனால் பெரிய அளவில் வேலைவாய்ப்பு உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் திட்டத் தயாரிப்பு நிதியினைப் பயன்படுத்தி, இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு 2019-2020 ஆம் ஆண்டில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக, வரவு-செலவு திட்டத்தில் 100 கோடி ரூபாய் தொடக்க முதலீடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

117. 2019-2020 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சுற்றுலாத் துறைக்கு 186.23 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கலை பண்பாட்டுத் துறைக்கு 56.23 கோடி ரூபாயும்,

அருங்காட்சியகங்கள் துறைக்கு 14.65 கோடி ரூபாயும், தொல்லியல் துறைக்கு 10.19 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**இந்து சமய அறநிலையத் துறை**

118. மாநிலத்தில் 754 திருக்கோயில்களில் ‘அன்னதானத் திட்டம்’ செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2011 ஆம் ஆண்டு முதல் இதுவரை 10,961 திருக்கோயில்களுக்கு 515.05 கோடி ரூபாய் செலவில் குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு முதல் இதுவரை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள 6,159 திருக்கோயில்களின் திருப்பணிக்காக 43.39 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. கிராமப்புற கோயில்களுக்கான நிதியுதவித் திட்டமும், ‘ஒரு கால பூஜை’ திட்டமும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இந்து சமய அறநிலையத் துறைக்கு 281.86 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சமூக நலன்**

119. பெண்கள், குழந்தைகள் குறிப்பாக பெண் குழந்தைகள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 1992 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்காக 2019–2020 ஆம் ஆண்டிற்கு 140.11 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்களுக்காக 726.32 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும்,

பணிபுரியும் மகளிருக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கும் ‘அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தை’ தொடர்ந்து செயல்படுத்துவதற்காக 250 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

120. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் 43,205 மதிய உணவு மையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் 51.96 இலட்சம் மாணவ மாணவியர்கள் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ், குழந்தைகளுக்கு முட்டையுடன் சேர்த்து பல்வகை உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. **தற்போதைய சந்தை நிலவரத்தைக் கருத்தில் கொண்டு காய்கறி, தாளிதப் பொருட்கள், எரிபொருள் ஆகியவற்றுக்கான உணவுக் கட்டணம் உயர்த்தி வழங்கப்படும். இதனால் ஆண்டுக்கு 98 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.** 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக 1,772.12 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

121. ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் 54,439 மையங்கள் மூலம் 24.23 இலட்சம் குழந்தைகளும் 3.91 இலட்சம் வளரிளம் பெண்களும் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பத்து மாவட்டங்களில் உள்ள அங்கன்வாடி குழந்தைகளுக்கு இரண்டு இணை வண்ணச் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுப் பணிகள் திட்டத்தைச் செயல்படுத்த 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,052.22 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சமூகநலத் துறைக்காக 5,305.51 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்**

**122.** பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரைச் சார்ந்த மாணவ மாணவியர் குறைந்த செலவில் தடையின்றி கல்வி பெறுவதை உறுதிப்படுத்தும் வகையில், பள்ளிக் கல்வி உதவித்தொகை, உயர்கல்வி உதவித்தொகை ஆகியவற்றை இந்த அரசு வழங்கி வருகிறது. **2019–2020** ஆண்டில் இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த **290.71** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், **2019–2020** ஆம் ஆண்டில் பள்ளி மற்றும் தொழிற்பயிற்சி மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்குவதற்காக அரசு **138.48** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், விடுதி மாணவ மாணவியருக்கான உணவுச் செலவினங்களுக்காக **79.23** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்காக **911.47** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சிறுபான்மையினர் நலன்**

**123.** மொழி மற்றும் மத அடிப்படையிலான சிறுபான்மையினரின் நலன் காக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. அனுமதிக்கப்பட்டுள்ள **1,300** சிறுபான்மையின ஏழை மாணவ மாணவிகளின் நலனுக்காக **16** சிறுபான்மையினர் நல விடுதிகள் அரசால் பராமரிக்கப்படுகின்றன. மேலும் மசூதிகள் மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்களின் பராமரிப்பு மற்றும் புனரமைப்பிற்காக அரசு நல்கைகளை வழங்கி வருகின்றது. **2019–2020** ஆண்டிற்கு **14.99** கோடி ரூபாய் சிறுபான்மையினர் நலத் துறைக்காக அரசு ஒதுக்கியுள்ளது.

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்**

**124.** ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினரின் நீடித்த வளர்ச்சியையும், அவர்கள் கண்ணியத்தோடு வாழ்வதையும் உறுதிப்படுத்துவது இந்த அரசின் முதன்மையான நோக்கமாகும். அரசு, 1.29 இலட்சம் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் 1,682 விடுதிகளை நடத்தி வருகிறது. 2018–2019 ஆம் ஆண்டில், 23 அரசு விடுதிக் கட்டடங்கள் 26.63 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளதுடன், 33.83 கோடி ரூபாய் செலவில் 29 புதிய விடுதிக் கட்டடங்கள் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 20 விடுதிக் கட்டடங்கள் கட்டுவதற்கு 40 கோடி ரூபாயை 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. கல்லூரி மற்றும் பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கான மாதாந்திர உணவுக் கட்டணம் வழங்குவதற்காக, வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 103.55 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**125.** உயர்கல்விக்கான உதவித்தொகை திட்டத்திற்கான (Post-Matric Scholarship) வழிகாட்டு முறைகளில் மத்திய அரசு அண்மையில் மேற்கொண்ட மாற்றங்களினால், மத்திய அரசின் நிதிச்சுமை மாநில அரசிற்கு மாற்றப்பட்டு தமிழ் நாட்டின் நிதிப் பொறுப்பு 353.55 கோடி ரூபாயிலிருந்து, 1,526.46 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. மேலும், தொடர்ந்து நீண்டகாலமாக நிலுவையிலுள்ள தொகையினை விடுவிக்க மத்திய அரசினை தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளபோதும், மத்திய அரசு 985.80 கோடி ரூபாயை இதுவரை விடுவிக்கவில்லை. பெருமளவு நிதிச் சிக்கல்களை மாநிலம் சந்தித்து வந்தபோதிலும் இத்திட்டத்தை தொய்வின்றி செயல்படுத்த, உயர்கல்வி உதவித்தொகைக்காக 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத்

திட்ட மதிப்பீடுகளில் மாநில அரசு 1,857.13 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

126. பெண் குழந்தைகளின் சேர்க்கையினை 3 முதல் 8 வரை உள்ள வகுப்புகளில் ஊக்கப்படுத்தும் வகையில் ரொக்கப் பரிசு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் 48.70 கோடி ரூபாய் வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீட்டுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும். அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்குவதற்கு 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 71.01 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. **சிறப்புத் திட்டத்தின் மூலம் ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக, நடப்பு ஆண்டில் தொடங்கப்பட்ட நடவடிக்கைகளைத் தொடர்வதற்காக, 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளிலும் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

127. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருவாய் ஈட்டும் பணிகளுக்கு உதவவும், குடியிருப்புப் பகுதிகளில் அடிப்படை வசதிகளையும், உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில், இத்திட்டத்திற்கு 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **ஆளுநர் உரையில் அறிவித்தபடி, தொலைவிடங்களில் அமைந்துள்ள பழங்குடியினப் பகுதிகளில், பழங்குடியின மாணவர்கள் பயன்பெறும் வகையில், அரசு சாரா அமைப்புகள் புதிய பள்ளிக்கூடங்களைத்**

**தொடங்குவதற்கு ஊக்கத்தொகை வழங்க, ஆரம்பகட்ட ஒதுக்கீடாக 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

128. ஆதி திராவிடர்களுக்கான பொருளாதார மேம்பாட்டிற்கான சிறப்பு மத்திய நிதியுதவியின் கீழ் 135 கோடி ரூபாய் உட்பட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்காக 3,810.28 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பழங்குடியினர் நலனுக்காக 482.80 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாற்றுத் திறனாளிகள் நலன்**

129. மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் சட்டம் 2016 ஐ நடைமுறைப்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலங்களுள் ஒன்றாகத் திகழ்வதுடன், மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக மாநில அளவில் 10 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் மாற்றுத் திறனாளிகளுக்கான நிதியத்தை உருவாக்கியுள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்கான சுய வேலைவாய்ப்பினை ஊக்குவிக்க, அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் விளிம்பு உதவித்தொகை 10,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக 2018–2019 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது. தசைச் சிதைவு நோயினால் பாதிப்படைந்தோர், முதுகுத் தண்டுவடம் பாதிப்படைந்தோர், மூளை முடக்குவாதத்தினால் பாதிப்படைந்தோருக்காக, தனித்துவத்துடன் வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள், இரு கால்கள் பாதிப்படைந்தோருக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் போன்ற நவீன உதவி உபகரணங்கள் மாற்றுத் திறனாளிகள் எளிதாகவும், தன்னிச்சையாக இயங்குவதற்காகவும் வழங்கப்பட்டு வருகின்றன. **தற்போதைய தேவையைக் கருத்தில் கொண்டு 2019–2020 ஆம் ஆண்டிற்கு இதற்கான ஒதுக்கீடு**

**உயர்த்தப்பட்டு 3,000 சிறப்பு சக்கர நாற்காலிகளும் 3,000 பெட்ரோல் ஸ்கூட்டர்களும் வழங்கப்படும்.** இது தவிர செவித்திறன் பாதிப்படைந்தோருக்கான காதுக்குப்பின் அணியும் காதொலிக் கருவிகளும், பார்வைத்திறன் குறைபாடு உள்ளவர்களுக்கான உயர் தொழில்நுட்ப ஊன்றுகோல்களும் வழங்கப்படுகின்றன. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக 572.19 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு**

130. காஞ்சிபுரம் மாவட்டத்தில் கெனோயிங் மற்றும் கயாகிங் விளையாட்டிற்கான முதன்மை நிலை விளையாட்டு மையம்; தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் இறகுப்பந்து விளையாட்டிற்கும், மேசைப்பந்து விளையாட்டிற்கும் முதன்மை நிலை மையங்கள் போன்ற உயர்தர விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை சர்வதேசத் தரத்தில் ஏற்படுத்தித் தருவதற்கு அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது. இவை மட்டுமல்லாமல், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் உலகத்தரம் வாய்ந்த நீச்சல்குள வளாகம், சென்னையில் உள்ள ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தில் சிறுமியர்கள் தங்குவதற்கு ஏற்ப அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய விளையாட்டு விடுதி போன்ற மேம்பட்ட விளையாட்டு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

131. ஒலிம்பிக், காமன்வெல்த், தெற்காசிய, ஆசிய மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்பவர்களுக்கு வழங்கப்படும் உயர் ஊக்கத் தொகை மற்றும் ‘பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெறும் திட்டம்’

(Mission International Medals Scheme) ஆகியவை தொடர்ந்து செயல்படுத்தப்படும். இந்த வரவு–செலவுத் திட்டத்தில், ஊக்கத் தொகை வழங்கும் திட்டங்களுக்காக 7.48 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இளைஞர்களிடையே விளையாட்டின் மீதான ஆர்வத்தை ஊக்குவிப்பதற்காக, 2018–2019 ஆம் ஆண்டில் மாநிலத்தில் உள்ள 12,524 கிராமப் பஞ்சாயத்துக்களில் கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு இந்த அரசு 25.05 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கென 168.27 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் நலன்**

132. கடுமையான நிதிச்சுமைக்கு இடையிலும், அரசுப் பணியாளர்களின் சம்பள உயர்வு மற்றும் படிகளை இந்த அரசு ஏற்கெனவே உயர்த்தி வழங்கியுள்ளதுடன், அகவிலைப் படியையும் காலமுறை தவறாமல் அவ்வப்போது உயர்த்தி வழங்கி வருகிறது. பழைய ஓய்வூதியத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட, ஓய்வுபெற்ற இந்திய ஆட்சிப் பணியாளர் திரு.டி.எஸ்.ஸ்ரீதர் தலைமையிலான குழுவும், ஊதிய முரண்பாடுகளைக் களைவதற்காக அமைக்கப்பட்ட திரு எம்.ஏ.சித்திக், இ,ஆ.ப., அவர்களின் தலைமையிலான குழுவும் தங்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளன. இவ்வறிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. அரசுப் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்களுக்கான காப்பீட்டுத் தவணைத் தொகை செலுத்துவதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில், முறையே 253 கோடி ரூபாய் மற்றும் 299.28 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் மற்றும் பிற ஓய்வுகாலப்

பலன்களுக்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில், முறையே **55,399.75** கோடி ரூபாயும், **29,627.11** கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

## பாகம் – ஆ

## வரவு–செலவுத் திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**133.** **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் கணிக்கப்பட்டுள்ள செலவினங்களை மேற்கொள்வதற்குத் தேவையான நிதி ஆதாரங்களைப் பற்றி இனி விளக்க விழைகிறேன்.

**134.** நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கு, திறன்மிக்க வரி நிருவாக அமைப்பு அவசியம் என்பதை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. மாநிலத்தின் நிதி மேலாண்மையை மேம்படுத்தும் நோக்குடன் மின் ஆளுமை முயற்சிகளை இந்த அரசு பெரிய அளவில் மேற்கொண்டு வருகிறது. மாநில கருவூலத் துறை நடவடிக்கைகளை மனிதவள தரவுகளுடனும், வரவு செலவுத் திட்டத்துடனும் ஒருங்கிணைத்து செயல்படுத்தும் பொருட்டு 'ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம்' தொடங்கப்பட்டுள்ளது. இத்தகைய திட்டம் நாட்டிலேயே முதலாவதாக தமிழ்நாட்டில் தான் செயல்முறைக்கு வந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டம், **2019** ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் **10** ஆம் தேதி அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. **2019** ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் மாநிலம் முழுவதும் இத்திட்டம் முழுமையான கணினி வழியில் செயல்படுத்தப்பட உள்ளது.

**135.** பதிவுத் துறையில் இணையவழியில் பணிகளை மேற்கொள்ள ஸ்டார் **2.0** மென்பொருள் பயன்படுத்தப்படுகிறது. இம்மென்பொருள் மூலம் பத்திரப் பதிவுகள், மின்னணு முறை செலுத்துகைகள், இணையவழி சரிபார்த்தல், பல்வேறு நடவடிக்கைகளின் தற்போதைய நிலையை தெரிந்துகொள்ளுதல், இணையவழி கையொப்பம், சிறப்புக் குறியீட்டுடன் பதிவேடுகளை வழங்குதல் போன்ற பல்வேறு பணிகளை இணையவழி மூலமே மேற்கொள்ளலாம். அதே போல் வரி செலுத்துபவர்களுடனும், வணிகர்களுடனும், இணையவழி மூலம் வணிகவரித்துறை நேரடித் தொடர்பை ஏற்படுத்தி, வரி செலுத்துவது தொடர்பான அனைத்து நடைமுறைகளையும் கணினி மூலம் செயல்படுத்துவதை, வணிகவரித் துறையால் செயல்படுத்தப்படும் ‘முழுமையான தீர்வுத் திட்டம்’ (Total Solution Project) உறுதி செய்யும்.

**136.** மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் வணிக வரிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விதிப்பு முறை அமல்படுத்தியதால் ஏற்கெனவே மாநிலங்களுக்கு இருந்த குறைந்த வரி விதிப்பு அதிகாரங்களைக் குறைத்து, மாநிலங்கள் வரி வருவாய் ஈட்டும் திறனை மேலும் குறைத்துள்ளது. மேலும், பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விதிப்பு முறையின் கீழ் தொடர்ந்து குறைக்கப்பட்டு வரும் வரி விகிதங்கள், இணையதளத்தில் நமூனாக்களை தாக்கல் செய்வதில் நிலவும் சிக்கல்கள், ஒருங்கிணைந்த பொருட்கள் மற்றும் சேவைகள் வரியாக வசூலிக்கப்பட்ட தொகையில் மாநில அரசின் பங்கை விடுவிப்பதிலும், பொருட்கள் மற்றும் சேவைகள் வரியில் உறுதிசெய்யப்பட்ட இழப்பீட்டினை விடுவிப்பதிலும் மத்திய அரசு காட்டும் தாமதம் போன்றவை பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விதிப்பு முறையின் கீழ் வரும் வரி வருவாய் வரவுகளை பெருமளவில் நம்பியிருக்கும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் நிதி நிலைமைக்கு

பெரும் சவாலை ஏற்படுத்துகிறது. வணிக வரி வருவாயில், பெட்ரோலிய பொருட்கள் மற்றும் மதுபானப் பொருட்கள் விற்பனையின் மீதான வரி மற்றுமொரு முக்கியமான வருவாயாக உள்ளது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, 2018–2019 ஆம் ஆண்டிற்கான வணிகவரியின் வருவாய், திருத்த மதிப்பீடுகளில் 84,365.91 கோடி ரூபாயாகவும், 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 96,177.14 கோடி ரூபாயாகவும் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

137. தமிழ்நாட்டில், டாஸ்மாக் மூலம் ஏற்கெனவே நடத்தப்பட்டு வந்த 7,896 சில்லறை மதுபான விற்பனை மையங்கள் 5,198 ஆக தற்போது குறைக்கப்பட்டுள்ளன. மாநில ஆயத்தீர்வைகளில் தற்போதுள்ள போக்கினைக் கருத்தில் கொண்டு, இதன் வருவாய் வரவினம் 2018–2019 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 6,724.38 கோடி ரூபாயாகவும், 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 7,262.33 கோடி ரூபாயாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவுக் கட்டணங்களின் கீழ் பெறப்படும் வருவாய் வரவினங்களில் நல்ல வளர்ச்சி காணப்படுவதால், 2018–2019 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவுக் கட்டணங்களின் கீழ் பெறப்படும் வருவாய் 11,512.10 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. **நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு அல்லது மறுகட்டமைப்பு (Amalgamation or Reconstruction) தொடர்பான சொத்துப் பரிமாற்றங்களுக்கான முத்திரைத் தீர்வை சொத்தின் சந்தை மதிப்பில் 2 சதவீதம் அல்லது பங்குகளின் ஒட்டுமொத்த சந்தை மதிப்பில் 0.6 சதவீதம், இதில் எது அதிகமோ அது நிர்ணயிக்கப்படும். அதேபோல, இத்தகைய பரிமாற்றங்களுக்கான பதிவுக் கட்டணம் அதிகபட்சமாக 30,000 ரூபாய்**

**என நிர்ணயிக்கப்படும். இதன் மூலம், இத்தகைய பரிமாற்றங்களின் மீது செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் குறித்த தெளிவு ஏற்படும்.** இவற்றைக் கருத்தில் கொண்டு 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவுக் கட்டணங்களின் கீழ் பெறப்படும் வருவாயாக 13,122.81 கோடி ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 2018–2019 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளை விட 2,187.14 கோடி ரூபாய் அதிகமாகும். 2018–2019 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் வாகனங்கள் மீதான வரி வருவாய் 5,918.82 கோடி ரூபாயாக இருக்கும் எனவும், 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் 6,510.70 கோடி ரூபாயாக இருக்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

138. 2018–2019 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வரவினங்கள் 1,10,178.43 கோடி ரூபாயாக உயர்த்தி கணிக்கப்பட்டுள்ளதுடன், 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,24,813.06 கோடி ரூபாயாக இருக்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநிலத்தின் சொந்த வரியல்லாத வருவாய் 13,326.91 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

139. மாநிலங்களுக்கு இடையிலான மத்திய வரிகளின் பகிர்வில், தமிழ்நாட்டிற்கான பங்கு ஒன்பதாவது நிதிக்குழுவின் பரிந்துரையான 7.931 சதவீதத்தில் இருந்து, பதினான்காவது நிதிக்குழுவின் பரிந்துரைகளின் படி 4.023 சதவீதமாக ஒவ்வொரு நிதிக் குழுவின் பரிந்துரைகளாலும் தொடர்ந்து குறைக்கப்பட்டு

வந்துள்ளது. பதினான்காவது நிதிக்குழு காலத்தில் மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வுப் பங்கு 32 சதவீதத்திலிருந்து 42 சதவீதமாக உயர்ந்தபோதும், சேவை வரி மற்றும் ஏனைய வரிகளில் மாநிலங்களுக்கு இடையிலான மத்திய வரிகளின் பகிர்வில் தமிழ்நாட்டின் பங்கு, முறையே, 5.047 சதவீதத்திலிருந்து 4.104 சதவீதமாகவும், 4.969 சதவீதத்திலிருந்து 4.023 சதவீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, தமிழ்நாடு மட்டுமே மத்திய வரிப் பகிர்வில் 14வது நிதிக்குழு பரிந்துரை நடைமுறைக்கு வந்த ஆண்டில் 30 சதவீதத்திற்கும் குறைவான வளர்ச்சியை பெற்றது. மாநிலங்களுக்கிடையேயான நிதிப் பகிர்வில், பதினைந்தாவது நிதிக் குழு நடுநிலையான, நியாயமான பரிந்துரைகளை மத்திய அரசிற்கு அளிக்கும் எனவும், கடந்த காலங்களில் தமிழ்நாட்டிற்கு இழைக்கப்பட்ட அநீதி சரிசெய்யப்படும் எனவும் மாநில அரசு நம்பிக்கையுடன் உள்ளது. இக்காரணிகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு, 2018–2019 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில், 30,638.87 கோடி ரூபாயாகவும், 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 33,978.47 கோடி ரூபாயாகவும் மத்திய வரிகளில் பங்கு இருக்குமென கணிக்கப்பட்டுள்ளது.

140. பதினான்காவது நிதிக் குழுவின் பரிந்துரையை நடைமுறைப்படுத்திய பின்னர், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களில் தனது பங்கை மத்திய அரசு கணிசமாகக் குறைத்துள்ளது. அத்திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகளில் மத்திய அரசு மேற்கொண்ட மாற்றங்களால், மாநில அரசின் மீதான நிதிச் சுமை மேலும் அதிகரித்துள்ளது. தற்போதைய போக்குகளின் அடிப்படையிலும், மத்திய அரசு தனது 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் செய்த நிதி ஒதுக்கீடுகளின் அடிப்படையிலும், 2019–2020 ஆம்

ஆண்டில் மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் 25,602.74 கோடி ரூபாயாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

**நிதிநிலைக் குறியீடுகள்**

141. 2018–2019 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில், மாநிலத்தின் மொத்த வருவாய் வரவுகள் 1,80,618.71 கோடி ரூபாயாகவும், வருவாய்ச் செலவினங்கள் 1,99,937.73 கோடி ரூபாயாகவும் இருக்கும். இதன் விளைவாக, 2018–2019 ஆம் ஆண்டிற்கு வருவாய்ப் பற்றாக்குறை 19,319.02 கோடி ரூபாயாக இருக்குமென கணிக்கப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டில், மாநிலத்தின் மொத்த வருவாய் வரவுகள் 1,97,721.17 கோடி ரூபாயாக இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது. ஊதிய உயர்வினால் ஏற்படும் நிதிச் சுமை, உதய் திட்டத்தால் அரசுக்கு ஏற்படும் கூடுதல் பொறுப்பு போன்றவை 2019–2020 ஆம் ஆண்டிலும் தொடரும். இவற்றைத் தவிர, மின் மானியம், உணவு மானியம், சமூக நலத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியங்கள், வீட்டுவசதி போன்ற மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் உட்பட பல்வேறு நலத் திட்டங்களையும் இந்த அரசு தொடர்ந்து மேற்கொள்கிறது. எனவே, மொத்த வருவாய்ச் செலவினங்கள் 2,12,035.93 கோடி ரூபாயாகவும், இதன் விளைவாக வருவாய்ப் பற்றாக்குறை 14,314.76 கோடி ரூபாயாகவும் இருக்கும் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

142. சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டுதல், நீர்ப்பாசனம் மற்றும் மின் திட்டங்கள் போன்ற மூலதனச் செலவினங்களுக்கு இந்த அரசு எப்போதும் தனிக் கவனம் செலுத்தி வந்துள்ளது. மாநிலத்தின் நிலையான பொருளாதார வளர்ச்சியில் உட்கட்டமைப்பு மேம்பாட்டின் முக்கியமான பங்கை கருத்தில் கொண்டு, 2018–2019 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில்,

26,191.98 கோடி ரூபாய் மூலதனச் செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவே, 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 31,251.21 கோடி ரூபாய் நிதியாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடு 2018–2019 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டை விட 19.32 சதவீதம் கூடுதலாகும்.

143. தமிழ்நாடு, நிதி மேலாண்மை நெறிகளை வழுவாமல் பின்பற்றி வந்துள்ளதுடன், நிதிப் பற்றாக்குறை, மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடன் விகிதம் போன்ற நிதிநிலைக் குறியீடுகளை வரையறைக்குள் பராமரித்து வருகிறது. 2018–2019 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில், நிதிப் பற்றாக்குறை விகிதம், மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 2.85 சதவீதமாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில், பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புகளையும், மின் ஆளுமை மற்றும் சிக்கன நடவடிக்கைகள் போன்று அரசு மேற்கொண்டுள்ள இதர நிதி மேலாண்மை நடவடிக்கைகளையும் கருத்தில் கொண்டு, 2019–2020 ஆம் ஆண்டில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை விகிதம் 2.56 சதவீதமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறைக்கு வரையறுக்கப்பட்ட மூன்று சதவீதத்திற்கு குறைவானதாகும்.

144. 2018–2019 ஆம் ஆண்டில் இந்த அரசு சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு, அனுமதிக்கப்பட்ட அளவான 47,350 கோடி ரூபாய்க்கும் குறைவான அளவிலேயே, அதாவது 44,066.82 கோடி ரூபாயை மட்டுமே நிகரக் கடனாகத் திரட்டி கடன் அளவைக் கட்டுப்படுத்தியுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட நிகரக் கடன் அளவு 51,800 கோடி ரூபாயாக

இருந்தாலும் 43,000 கோடி ரூபாய் அளவிலேயே நிகர கடன் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, 2020 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 அன்று, நிகர நிலுவைக் கடன்கள் 3,97,495.96 கோடி ரூபாயாக இருக்கும். மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் இந்த நிலுவைக் கடன் அளவு 23.02 சதவீதமாக இருக்கும் என்பதால், அனுமதிக்கப்பட்ட 25 சதவீத அளவிற்கு உட்பட்டே கடன் அளவு இருக்கும்.

145. இந்த நிதிநிலை அறிக்கையின் இணைப்பாக இடைக்கால நிதி நிலவரத் திட்டம் இணைக்கப்பட்டுள்ளது. இதனை நிதிநிலை அறிக்கையின் ஒரு பகுதியாகக் கருதி அவையில் படிக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன்.

146. கடந்த சில ஆண்டுகளாக பல்வேறு காரணங்களால் தமிழ்நாட்டின் வருவாய்ப் பற்றாக்குறை உயர்ந்து வந்துள்ளது. ‘உதய்’ திட்டத்தின் கீழ் மாநில அரசு ஏற்றுக்கொண்ட தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் 22,815 கோடி ரூபாய் கடன், ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரையை செயல்படுத்தியது ஆகியவற்றுடன், வரிவருவாய் வரவில் ஏற்பட்ட தொய்வு, மத்திய அரசின் குறைவான நிதிப் பகிர்வு போன்ற காரணங்களே வருவாய்ப் பற்றாக்குறை உயர்ந்து வருவதற்கான காரணங்கள் ஆகும். சம்பளங்கள், ஓய்வூதியங்கள், வட்டி செலுத்துதல் ஆகிய பொறுப்புகள் தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருவதுடன், மாநிலங்களிடம் இருந்த வரி விதிப்பு அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளதால் மாநிலத்தின் நிதி நிலைமையை வலுப்படுத்துவது சவாலாகவே உள்ளது. எனினும், வரும் ஆண்டுகளில், மாநிலம், உயர் வளர்ச்சிப் பாதைக்குச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் வரிவருவாய் உயரும் என்பதாலும், ஊதிய உயர்வு வழங்கியதால் ஏற்பட்ட நிதிச் சுமை ஓரளவு சமன்

செய்யப்படும் நிலையிலும், ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மை, செலவினங்களின் சீரமைப்பிற்காக சமீபத்தில் அமைக்கப்பட்ட பணியாளர் சீரமைப்புக் குழு போன்ற நிதி நிலைமையை சரி செய்வதற்கான முயற்சிகளாலும், வருங்காலத்தில் நிதிநிலை பராமரிப்பில் உறுதித் தன்மை ஏற்பட்டு வருவாய்ப் பற்றாக்குறை படிப்படியாகக் குறைவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

**147.** பல்வேறு நிதி நெருக்கடிக்கு இடையிலும், நிதிப் பற்றாக்குறையை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் மூன்று சதவீதத்திற்கும் குறைவாக அரசு பராமரித்து வருவதன் மூலம், நிதி மேலாண்மையில் தமிழ்நாடு தன் உறுதித்தன்மையைத் தொடர்ந்து நிலைநிறுத்தி வருகிறது. கடன் பெறுவதை முடிந்தவரை குறைப்பதன் மூலம் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடனளவை 25 சதவீதத்திற்குள் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து வழிமுறைகளையும் அரசு தொடர்ந்து மேற்கொள்ளும். மக்கள் நலத் திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்கான முயற்சிகளையும் இந்த அரசு தொடர்ந்து எடுக்கும் அதேவேளையில், நிதி மேலாண்மையையும் உறுதியோடு பராமரிப்பதுடன், நிதிநிலைக் குறியீடுகளையும் வரையறைக்குள் பராமரிக்கும். எனவே, வருவாய்ப் பற்றாக்குறையைக் குறைக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த வரவு–செலவுத் திட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள நிதிநிலை செயல் திட்டம், நீடித்த பொருளாதார வளர்ச்சியை மாநிலம் அடைவதற்கும், அனைவருக்கும் பயனளிக்கும் வளர்ச்சியைப் பெறுவதற்கும் வழிவகையை ஏற்படுத்தும் என கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**துன்பம் உறவரினும் செய்க துணிவுஆற்றி**
**இன்பம் பயக்கும் வினை**

**(குறள் 669)**

**148.** எடுத்த பணியின் தொடக்கத்தில் துன்பம் மிகுதியாக வந்தாலும், முடிவில் ஏற்படும் நன்மையைக் கருதி மனஉறுதியோடு செயல்பட்டு அதனைச் செய்து முடிக்க வேண்டும். இவை உலகப்புகழ் பெற்ற திருவள்ளுவரின் பொருளுள்ள வார்த்தைகளாகும். '**போற்றுவோர் போற்றினாலும், தூற்றுவோர் தூற்றினாலும் அதை பொருட்படுத்தாமல் செயல்பட வேண்டும்**' என்ற அப்பர் அடிகளின் உண்மையான வார்த்தைகளுக்கிணங்க எத்தனை தடைகள் வந்தாலும், தாக்குதல்கள் வந்தாலும், எத்தனை விமர்சனங்களை நாம் எதிர் கொண்டாலும், உறுதியுடனும் அர்ப்பணிப்பு உணர்வோடும், மக்கள்நலப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதே நமது தலையாய கடமையாகும். சமச்சீரான சமூகப் பொருளாதார மேம்பாட்டை தமிழ்ச் சமுதாயம் பெறவும்; ஏழைகள் வாழ்வில் முன்னேறவும்; இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெறவும்; நலிவடைந்த பிரிவினர் பொருளாதார முன்னேற்றமடைந்து வளமான வாழ்வை அவர்கள் பெறவும்; மாநிலம் அனைத்து துறைகளிலும் மேம்பட்டு செழிப்படையவும்; நமது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அடிநின்று அனைத்து நலத்திட்டங்களையும் செம்மையாகச் செயல்படுத்தி, மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக நாம் தொடர்ந்து பாடுபடுவோம் என்று உறுதி ஏற்று, மக்கள் பணியைத் தொடருவோம் என தெரிவித்துக் கொள்கிறேன்.

**149.** இந்த அரசின் முன்மாதிரியான முயற்சிகளுக்கு அடித்தளமாக அமைந்த நமது புரட்சித் தலைவி அம்மா அவர்களின்

இணையற்ற தொலைநோக்குப் பார்வையை இத்தருணத்தில் நான் நன்றிப்பெருக்குடன் நினைவு கூர்ந்திட விழைகிறேன். இந்த வரவு–செலவுத் திட்டத்தை உருவாக்குவதில், சிறந்த வழிகாட்டியாக இன்றும் அவர் திகழ்கிறார். இந்த வரவு–செலவுத் திட்டத்தை உருவாக்குவதில் முழுமனதுடன் ஆதரவளித்து, சிறந்த ஆலோசனைகளை வழங்கி, சமர்ப்பிக்க எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**150.** இந்த நிதிநிலை அறிக்கையை வடிவமைத்து தயாரிப்பதில் என்னுடன் அயராது பணியாற்றிய நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., அவர்களுக்கும், அவருடன் கடினமாகப் பணியாற்றிய நிதித்துறையின் அனைத்து அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**151.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்திற்கு இந்த அவையின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**நன்றி**

**வணக்கம்**

**ஓ.பன்னீர்செல்வம்**
துணை முதலமைச்சர்

சென்னை
2019 ஆம் ஆண்டு
பிப்ரவரி திங்கள் 8 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2050
விளம்பி – தைத் திங்கள் 25 ஆம் நாள்

## இணைப்பு

## இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் உட்பிரிவு (1)–ன்படி, வரவு–செலவுத் திட்ட அறிக்கையுடன், இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றையும், மாநில அரசு சட்டப் பேரவையில் வைக்க வேண்டும். மேலும், இச்சட்டத்தின், 3 ஆம் பிரிவின் உட்பிரிவு (2)–ன்படி, வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை போன்ற நிதி நிலைக் குறியீடுகளுக்கான இலக்குகளை அடுத்தடுத்து வரும் ஆண்டுகளுக்குக் குறிப்பிட்டும், அவற்றின் கணக்கீட்டிற்கான அனுமானங்களைத் தெளிவாக விளக்கியும் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கூறப்பட்டுள்ள விதிகளின்படி, 2019–2020 ஆம் ஆண்டு முதல் 2021–2022 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுகிறது.

### நோக்கங்கள்

வளர்ச்சி திட்டச் செலவினங்களுக்கான தேவைகள் மற்றும் நிதிச் சிக்கனத்திற்கும் இடையே சமநிலையை ஏற்படுத்தும் வகையிலும், முக்கியத் துறைகளில் முதலீட்டுக்குத் தேவையான அடிப்படை நிதி ஆதாரத்தை உருவாக்கக் கூடிய, உயர் பொருளாதார வளர்ச்சியை அடையும் வகையிலும் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. சமூகப் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற பல்வேறு பணிகளுக்கான நலத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. அதே வேளையில், அகவிலைப்படியின் காலமுறை உயர்வு, ஊதிய உயர்வு, புதிய பணியிடங்கள் தோற்றுவிப்பு மற்றும் காலியாக உள்ள

பணியிடங்களை நிரப்புதல், ஓய்வூதியம் மற்றும் வட்டி செலுத்துதல் போன்றவற்றின் காரணமாக தொடர்ந்து உயர்ந்து வரும் நிருவாகச் செலவினங்களுக்கான நிதித் தேவைகளையும் மாநில அரசு நிறைவு செய்ய வேண்டியுள்ளது. இந்த வருவாய் செலவினங்களுடன், சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டுதல், நீர்ப்பாசனம் மற்றும் மின் திட்டங்கள் போன்ற மூலதனச் செலவுகளுக்கும் இந்த அரசு உரிய முக்கியத்துவம் அளித்து வருகிறது. மத்திய நிதிக்குழு வகுத்துள்ள இலக்குகளுக்கு உட்பட்டு நிதிநிலை உறுதித் தன்மையை அடையவும் மாநில அரசு உறுதியாக உள்ளது.

2019–2022 ஆம் ஆண்டு காலகட்டத்திலும், அதனைத் தொடர்ந்து வரும் காலத்திலும், வருவாய்ப் பற்றாக்குறை அளவைக் கட்டுப்படுத்துதல், நிதிப் பற்றாக்குறையை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் மூன்று சதவீதத்திற்குள் கட்டுப்படுத்துதல் மற்றும் மத்திய நிதிக்குழு நிர்ணயித்துள்ள வரம்பிற்குள் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிலுவைக் கடன் அளவு சதவீதத்தைப் பராமரித்தல் ஆகிய நிதிநிலை இலக்குகள் பராமரிக்கப்படுவதை இந்த இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டமானது உறுதி செய்கிறது.

**எதிர்காலக் கணிப்புகள்**

வரும் ஆண்டுகளில், உலகப் பொருளாதாரம் மிதமான வளர்ச்சியைக் கொண்டிருந்தாலும், இந்தியப் பொருளாதாரம் சிறந்த வளர்ச்சிப் பாதையில் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2011–2012 ஆம் ஆண்டின் நிலையான விலைகளின் அடிப்படையில், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீடு கணிக்கப்பட்டு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

**I. வருவாய்க் கணக்கு வரவுகள்**

மத்திய அரசின் நிதி உதவி உட்பட மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் 2019–2020 ஆம் ஆண்டில் 1,97,721.17 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. அதன் முக்கியக் கூறுகள் மற்றும் அவற்றின் வளர்ச்சிப் போக்குகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

**1. மாநில அரசின் சொந்த வரி வருவாய்**

மாநில பொருளாதார வளர்ச்சியில் காணப்படும் சாதகமான சூழ்நிலை, மாநிலத்தின் சொந்த வரி வருவாயை உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2017 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விதிப்பு முறை, நடைமுறைப்படுத்தும்போது ஆரம்பக் கட்டத்தில் சிக்கல்கள் நிலவினாலும், சிறிது காலத்திற்கு பின்னர் வரி வருவாயில் ஓரளவு வளர்ச்சி கண்டுள்ளது.

மாநில அரசின் சொந்த வரி வருவாய் 2018–19 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 1,10,178.43 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இது 1,24,813.06 கோடி ரூபாயாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2020–2021 மற்றும் 2021–2022 ஆண்டுகளில் சொந்த வரி வருவாயின் வளர்ச்சி விகிதம் முறையே 13.12 சதவீதமாகவும், 13 சதவீதமாகவும், இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாநில அரசின் சொந்த வரி வருவாயின் முக்கிய அம்சங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:–

- பொருட்கள் மற்றும் சேவைகள் வரியின் உறுதிசெய்யப்பட்ட வளர்ச்சி மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகள் வரி அல்லாத வரிகளான பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் மதுபானங்கள் மீதான விற்பனை வரியின் வளர்ச்சியினை கருத்திற்கொண்டு வணிகவரிகள் மூலம் பெறப்படும் வரவுகள் 96,177.14 கோடி ரூபாயாக 2019–2020 ஆம் ஆண்டின் வரவு–செலவு திட்டமதிப்பீடுகளில் கணக்கிடப்பட்டுள்ளது.

- மாநில ஆயத்தீர்வைகளில் 2018–2019 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீட்டைவிட 2019–2020 ஆம் ஆண்டில் 8 சதவீத வளர்ச்சி எதிர்பார்க்கப்படுவதால், 2019–2020 ஆம் ஆண்டில் இது 7,262.33 கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- மதிப்பிடப்பட்ட வளர்ச்சியான 14 சதவீதத்தின் படி, 2018–2019 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 11,512.10 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட முத்திரைத்தாள் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்கள் மூலமாகக் கிடைக்கும் வரவுகள், 2019–2020 ஆம் ஆண்டில், 13,122.81 கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- 2018–2019 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 5,918.82 கோடி ரூபாயாகக் கணிக்கப்பட்ட மோட்டார் வாகன வரிவருவாய், 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 6,510.70 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**2. வரி அல்லாத வருவாய்**

2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் 13,326.91 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில்

சுரங்கத் தொழிலுக்கான வாய்ப்புகள் குறைவு என்பதாலும், பெரும்பாலான அரசு சேவைகள் கட்டணம் இல்லாமலோ அல்லது குறைந்த கட்டணத்திலோ வழங்கப்படுவதாலும், 2020–2021 மற்றும் 2021–2022 ஆம் ஆண்டுகளில் வரி அல்லாத வருவாயின் வளர்ச்சி விகிதம் 5 சதவீதமாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## 3. மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு

கடந்த ஐந்து நிதிக் குழுக்களிலும் மத்திய வரிகளின் பங்கில் நிலையான சரிவை தொடர்ந்து எதிர்கொள்ளும் ஒரே மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. பதினான்காவது நிதிக்குழு காலத்தில் மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வுப் பங்கு 32 சதவீதத்திலிருந்து 42 சதவீதமாக உயர்ந்தபோதும், மாநிலங்களுக்கு இடையிலான மத்திய வரிகளின் பகிர்வில் தமிழ்நாட்டின் பங்கு 4.969 சதவீதத்திலிருந்து 4.023 சதவீதமாகக் குறைக்கப்பட்டதால், மத்திய அரசிடமிருந்து தமிழ்நாடு பெறும் மொத்த நிதிப் பகிர்வில் நிகர இழப்பினை சந்தித்தது. பதினான்காவது நிதிக்குழு பரிந்துரைகள் நடைமுறைக்கு வந்த ஆண்டில், மாநிலங்களுக்கு இடையிலான மத்திய வரிப்பகிர்வின் வளர்ச்சியில் 30 சதவீதத்திற்கும் குறைவாகப் பெற்ற மாநிலங்களில் தமிழ்நாடு மட்டுமே உள்ளது. மத்திய அரசு பங்குபெறும் திட்டங்களில் மத்திய அரசு தன் பங்கை தொடர்ச்சியாகக் குறைத்ததும், மத்திய அரசிடமிருந்து பெறும் மொத்த நிதியில் இழப்பினை ஏற்படுத்தியுள்ளது. சமீபத்தில் அமைக்கப்பட்ட பதினைந்தாவது நிதிக்குழுவிற்கு மாநில அரசு அளித்த பரிந்துரைகளுடன் இந்த வரலாற்று அநீதிகளும் தெரிவிக்கப்பட்டது. பதினைந்தாவது நிதிக் குழுவின் பரிந்துரைகள் இன்னும் அளிக்கப்படாத நிலையில், 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள் 33,978.47 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2020–2021 மற்றும் 2021–2022 ஆம்

ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் 10 சதவீதமாக இருக்குமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

**4. மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள்**

2019–2020 ஆம் ஆண்டின் மத்திய வரவு – செலவுத் திட்டத்தின் தற்போதைய போக்குகள் மற்றும் ஒதுக்கீடுகளின் அடிப்படையில் 2019–2020 ஆம் ஆண்டிற்கான மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியம் 25,602.74 கோடி ரூபாயாக, மதிப்பிடப்பட்டுள்ளது. 2020–2021 மற்றும் 2021–2022 ஆம் ஆண்டுகளில் இதன் வளர்ச்சி விகிதம் 5 சதவீதமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

**II. வருவாய்க் கணக்கில் செலவுகள்**

2019–2020 ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கு செலவுகள் 2,12,035.93 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 2018–2019 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளை விட 6.1 சதவீதம் கூடுதலாகும். வருவாய்க் கணக்கு செலவுகளின் முக்கிய கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

❖ 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சம்பள செலவினத்திற்கான ஒதுக்கீடு 55,399.74 கோடி ரூபாயாகும். ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வுக்கால பலன்கள் குறித்த செலவினத்திற்கான ஒதுக்கீடு 29,627.11 கோடி ரூபாயாகும். ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தியதால், 2018–2019 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகள் மற்றும் 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சம்பளங்கள், ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வுக்கால செலவினங்களுக்கான ஒதுக்கீட்டில் உயர்வு காணப்படுகிறது.

இந்த இரண்டு கூறுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள், 2019–2020 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய்ச் செலவினத்தில் 40.10 சதவீதமாகும். அகவிலைப்படியின் காலமுறை உயர்வு, ஊதிய உயர்வு மற்றும் காலிப் பணியிடங்களை நிரப்புதல் ஆகியவற்றால் ஏற்படக்கூடிய செலவுகளின் காரணமாக, 2020–2021 மற்றும் 2021–2022 ஆம் ஆண்டுகளுக்கான சம்பளச் செலவினம், மற்றும் ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வுகாலப் பலன்கள் குறித்த செலவினங்கள் ஆகியவற்றின் வளர்ச்சி விகிதம், முறையே 9 மற்றும் 8 சதவீதமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

❖ 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் உதவித்தொகைகள் மற்றும் நிதி மாற்றங்களுக்கான ஒதுக்கீடு 82,673.32 கோடி ரூபாயாகும். உணவு மானியம், மின்சார மானியம், கல்வி உதவித்தொகைகள், வீட்டுவசதித் திட்டங்கள், சமூக பாதுகாப்பு ஓய்வூதியங்கள் மற்றும் விவசாயக் கடன் தள்ளுபடி திட்டம் போன்ற பல்வேறு நலத்திட்டங்களுக்கான செலவினங்கள் இந்த மதிப்பீடுகளில் உள்ளடங்கியுள்ளன. மேலும், ஐந்தாவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பகிர்வு அதிகரிக்கப்பட்டு இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. 2020–2021 மற்றும் 2021–2022 ஆம் ஆண்டுகளில் உதவித்தொகைகள் மற்றும் நிதி மாற்றங்களுக்கான வளர்ச்சி விகிதம் 5.5 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

❖ 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஊதியம் அல்லாத செயல்முறை மற்றும் பராமரிப்பு செலவுகள் 11,083.42 கோடி ரூபாயாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இம்மதிப்பீடு குறிப்பாக, பராமரிப்பு, நிர்வாகச் செலவுகள், எரிபொருள் செலவுகள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு சீருடை வழங்குதல் ஆகிய திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளை

உள்ளடக்கியதாகும். 2020–2021 மற்றும் 2021–2022 ஆம் ஆண்டுகளில் இதன் வளர்ச்சி விகிதம் 5 சதவீதமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

❖ 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வட்டி செலுத்துவதற்கான செலவினம் 33,226.27 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது மொத்த வருவாய்ச் செலவினத்தில் 15.67 சதவீதமாகும். 2019–2020 ஆம் ஆண்டிற்கான வட்டி செலுத்துதலுக்கான செலவினம், மொத்த வருவாய் வரவில் 16.80 சதவீதமாகும். இது, 2020–2021 மற்றும் 2021–2022 ஆம் ஆண்டுகளில், முறையே, 17.41 மற்றும் 18.04 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## III. மூலதனக் கணக்கில் செலவுகள்

பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக, மூலதன உட்கட்டமைப்பை உருவாக்க வேண்டியதன் தேவையை உணர்ந்து, 2018–2019 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 26,191.98 கோடி ரூபாய் மூலதனச் செலவினத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 31,251.21 கோடி ரூபாயாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது 2020–2021 மற்றும் 2021–2022 ஆம் ஆண்டுகளில் 18 சதவீதமாக மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## IV. வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறை

❖ உதய் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் 22,815 கோடி ரூபாய் கடனை அரசே ஏற்றுக்கொண்டது மற்றும் ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியது ஆகியவற்றால், வருவாய்ப் பற்றாக்குறை

அதிகரித்து வந்துள்ளது. இருந்தபோதிலும், எதிர்வரும் ஆண்டுகளில் மாநிலமானது உயர் வளர்ச்சி பாதையை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஊதிய மாற்றங்களினால் ஏற்பட்ட பாதிப்புகள் படிப்படியாக குறைக்கப்பட்டுள்ளதுடன், நிதி நிலை மேலாண்மை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ பல்வேறு நிதி பிரச்சினைகள் இருப்பினும், மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப்பற்றாக்குறை விகிதத்தை மூன்று சதவீதத்திற்குள்ளாகவே அரசு பராமரித்து வருகிறது. எதிர்வரும் ஆண்டுகளில் உள்ள நல்ல வளர்ச்சிக்கான வாய்ப்புகள் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப்பற்றாக்குறை விகிதத்தை மூன்று சதவீதத்திற்கும் கீழாக பராமரிக்க உதவும். இதனால், தமிழ்நாடு சிறந்த நிதி மேலாண்மை செய்து வரும் மாநிலம் என்ற நிலை தொடரும்.

❖ **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வருவாய்ப் பற்றாக்குறை **14,314.76** கோடி ரூபாயாகவும், நிதிப் பற்றாக்குறை **44,176.36** கோடி ரூபாயாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. **2019–2020** ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப்பற்றாக்குறையின் விகிதம் **2.56** சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது நிதிப் பற்றாக்குறை வரம்பான மூன்று சதவீதத்திற்குள்ளாகவே இருக்கும். வரும் காலங்களில், மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறையின் விகிதம் **2020–2021** ஆம் ஆண்டில் **2.39** சதவீதமாகவும், **2021–2022** ஆம் ஆண்டில் **2.25** சதவீதமாகவும் இருக்கும்.

## V. கடன்கள்

பதினான்காவது நிதிக் குழு பரிந்துரைத்த கணக்கீட்டின்படி மத்திய அரசு நிர்ணயித்த ஒட்டுமொத்தக் கடன் வரம்பின் அடிப்படையில், கடன் வரவுகள் மற்றும் திரும்பச் செலுத்துதல் மதிப்பிடப்பட்டுள்ளன. 2019–2020 ஆம் ஆண்டிற்கான, நிகரக் கடன் வரம்பு 51,800 கோடி ரூபாய் என்று கணிக்கப்பட்டிருந்தாலும், மாநில அரசு 43,000 கோடி ரூபாய் மட்டுமே நிகரக் கடன் வாங்க திட்டமிட்டுள்ளது. வருங்கால வைப்பு நிதி உட்பட நிலுவையிலுள்ள மொத்தக் கடன் 2019–2020 ஆம் ஆண்டில் 3,97,495.96 கோடி ரூபாயாக இருக்கும். இது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 23.02 சதவீதம் மட்டுமே ஆகும்.

## VI. கடன் உத்திரவாதங்கள்

ஒவ்வொரு ஆண்டிலும் நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 100 சதவீத அளவு அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 10 சதவீத அளவு, இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும். 2018 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி அன்று உள்ளபடி நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்களின் அளவு, மொத்த வருவாய் வரவுகளில் 25.77 சதவீதமாகவும், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 2.5 சதவீதமாகவும் உள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் (Risk weighted) கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 75 சதவீதம் அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 7.50 சதவீதம் இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும். 2018 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி அன்று உள்ளபடி மீளப்பெறும்

சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்களின் (Risk weighted guarantees) அளவு, முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் 4.47 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 0.43 சதவீதமாகவும் உள்ளது.

**முடிவுரை**

இடையில் தற்காலிக பின்னடைவு ஏற்பட்ட போதிலும், 2012–2013 ஆம் ஆண்டில் 5.37 சதவீதமாக இருந்த மாநில மொத்த உற்பத்தி மதிப்பின் வளர்ச்சி விகிதமானது (நிலையான விலைகளின் அடிப்படையில்), 2018–2019 ஆம் ஆண்டில் 8.16 சதவீதமாக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டின் வரிவருவாய் வளர்ச்சிப் பாதையில் இருக்கும் என மதிப்பிடப்பட்ட போதிலும், ஒருங்கிணைந்த பொருட்கள் மற்றும் சேவைகள் வரியில் மாநிலத்தின் பங்கு மற்றும் தமிழ்நாட்டிற்கு கிடைக்கப்பெற வேண்டிய இழப்பீட்டுத் தொகை தாமதமாக மத்திய அரசால் விடுவிக்கப்படுவதால், மாநிலத்திற்கு அதிக நிதி நெருக்கடியினை அளித்துள்ளது. மேலும், பதினான்காவது நிதிக் குழுவின் பரிந்துரைகளால் மத்திய அரசு மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கக்கூடிய நிகர வரி வருவாயில் தமிழகத்தின் பங்கு குறைந்தது மற்றும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்ட பணிகளில் மாநில அரசின் பங்கு உயர்ந்தது, மத்திய அரசின் பங்கு தொகையினை விடுவிப்பதில் காலதாமதம் ஆகியன மாநில அரசின் நிதிநிலையை பாதித்துள்ளது. ஏழாவது மத்திய ஊதியக்குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்தியதால் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் உயர்த்தப்பட்டதைத் தவிர, இதரச் செலவுகளின் பங்கு நிலையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிதிநிலைக் குறியீடுகளான,

ஒட்டுமொத்த நிதிப் பற்றாக்குறை, நிகரக் கடன், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் நிலுவையில் உள்ள மொத்தக் கடன் விகிதம் ஆகியவை பல நிதி நெருக்கடிக்கிடையிலும் அனுமதிக்கப்பட்ட அளவிற்குள்ளேயே கட்டுப்படுத்தப்படும். விரைவான பொருளாதார வளர்ச்சியை அடையவும், சீரான நிதி மேலாண்மையை உறுதி செய்யவும் அரசு அனைத்து வகையான நடவடிக்கைகளையும் தொடர்ந்து எடுத்து வருகிறது.

**************